பார்வை

சிறுகதைகள்

சாந்தன்

விலை சதம் 50

சுதியீபுனைச்சு

பார்வை

சிறுகதைத் தொகுதி

சாந்தன்

யாழ். இலக்கிய நண்பர் கழக
வெளியீடு.

யா. இ ந. க. வெளியீடு: 1.

முதலாம் பதிப்பு: சித்திரை 1970

பதிப்பாளர் முகவரி:

அலுவலகம்,
யாழ். இலக்கிய நண்பர் கழகம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை.

(கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனை)

விலை: 50 சதம்

பதிப்புரை

எதற்கும் தென்னிந்தியாவையே எதிர்பார்க்கும் நிலை மாறுதலாகவும், தரமான இரசனையினைப் பேணுவதாலும், ஈழத்து இலக்கிய உலகம் இன்று ஒரு புத்தெழுச்சி பெற்று வருகிற இக்காலகட்டத்தில்—

இலக்கிய ஆர்வமுள்ள இளைஞர்கள், இளம் எழுத்தாளர்கள், இவர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு, 'யாழ்—இலக்கிய நண்பர் கழகம்' நாலாண்டுகட்கு முன் நிறுவப்பட்டது.

ஈழத்தில், எழுத்தாக்கங்கள் நூலுருவில் வெளிவருதல் ஒரு அவசிய தேவையாதலால், கழகம் தன் அங்கத்தினர்களின் படைப்புக்களுக்கு உரிய முறையில் ஊக்கமளிப்பதை முதன் நோக்காகக் கொண்டுள்ளது. இந்த முயற்சியில், சாந்தனின ''பார்வை'' என்ற இச்சிறுகதைத் தொகுப்பு முதல் வெளியீடாக வருகிறது.

இந்நூல், ஈழத்து ஏடுகளிம் வெளியான சாந்தனின் சிறுகதைகளிலிருந்து தொகுக்கப்பட்டிருக்கிறது. சிதறலாச வெளியாகின்ற ஒரு ஆசிரியனின் படைப்புக்கள் தொகுக்கப்படுகையில், அவரை வாசகர்களும் விமர்சகர்களும் முழுமையாகக்கண்டு கணிக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இந்த இளம் நண்பரின் தரமான எழுத்துக்களுக்கு நூலுருக்கொடுத்து எல்லோரும் வாங்கக் கூடிய வகையில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். எமது முயற்சி, வாசகர்களிடம் உரிய வரவேற்பைப் பெறுமென்பதில் எமக்குப் பூரண நம்பிக்கையுண்டு.

வே. தேவதாசன்
செயலாளர்
யா.இ.ந.கழகம்

3-4-70
மானிப்பாய்

முகவுரை

''நான் ஒரு சிறுகதைத் தொகுதி வெளியிடப் போகிறேன் அதற்கு ஒரு முகவுரை பழைய எழுத்தாளர் ஒருவரிடமிருந்து வாங்க வேண்டுமென்று வந்திருக்கிறேன்...''—எதிர்பாராமல் என் அலுவலகத்திற்கு வந்த, முன்பின் அறிமுகமில்லாத ஒரு இளைஞரின் வேண்டுகோள, இது.

எனக்குள்ளே ஒரு சிறு 'இது': நான் 'பழைய எழுத்தாள'னாகி விட்டேனே!

உண்மைதான்; எழுதி எவ்வளவு காலமாகி விட்டது!

''உங்கள் பெயர்?''

''சாந்தன்''

''அதல்ல; உங்கள் உண்மையான பெயரைக் கேட்கிறேன்''

''அதுதான் உண்மையான பெயர்—ஐ. சாந்தன்''

''ஓ!''

ஆவலோடு வந்து கேட்பவருக்கு எழுதிக் கொடுக்கவேண்டுமென்ற இயற்கையான ஒரு விருப்பம். ஆனால் ஒரு சந்தேகம்—என்னுடைய சூழ்நிலையில் இவருடைய புத்தகத்தைப் படித்து முடித்து, முகவுரை எழுதி நேரகாலத்திற்குக் கொடுத்து விடுவேனா?

''புத்தகம் எத்தனை பக்கங்கள்?''

''சுமார் ஐம்பது பக்கங்கள்''

ஒரு பெரிய ஆறுதல் எனக்கு ஆனால், மீண்டும் ஒரு சந்தேகம். ஆளைப்பார்த்தால், மிகவும் இளைஞராக இருக்கிறார். நன்றாக எழுதியிருப்பாரென்ற நம்பிக்கை, நூற்றுக்குத் தொண்ணூறு வீதமும்

எனக்கு ஏற்படவில்லை. முகவுரை எழுதிக் கொடுப்பதென்றால், நன்றாக இல்லாவிட்டாலும் மோசமாக இருந்துவிடக்கூடாதே! 'பழைய எழுத்தாளனுக்குரிய நெஞ்சுரத்தோடு அவருக்குச் சொல்கிறேன்; ''உங்கள் கதைகளை வாசித்துப் பார்க்கிறேன். எனக்குப் பிடித்துக்கொண்டால் எழுதித் தருகிறேன். இல்லையென்றால் தவறாக நினைக்கக் கூடாது.''

அவர், ஒப்புக்கொண்டு விடை பெறுகிறார்.

வீட்டில் வந்து முதல் கதையை வாசிக்கிறேன். எனக்குப் பிடிக்கிறது. மற்றக் கதைகளைத் தொடர்ந்து வாசிக்கிறேன். எனக்கு நன்றாகப் பிடிக்கிறது!

இப்போதெல்லாம், அநேகமாகப் புறவாழ்வுப் பிரச்சினைகளை வைத்துக்கொண்டுதான் கதைகள் எழுதுகிறார்கள். சாதி வர்க்க வேறுபாட்டுப் பிரச்சினைகளை வைத்து எழுதுவதுதான் சிறப்பென்று கருதுகிறார்கள்.

ஆனால், நான் என்றைக்கும் மனிதருடைய உள்ள நெகிழ்ச்சிகளை, கிளர்ச்சிகளை வைத்து எழுதுவதை விரும்புகிறவன். அன்பர் சாந்தனும் இதே வழியில் வந்துகொண்டிருக்கிறார். அதனால் அவருடைய கதைகளை எனக்கு மிகவும் பிடிக்கிறது. பேச்சுத் தமிழை அசல் யாழ்ப்பாணத்து மணங்கமழும் சொற்களை எடுத்தாண்டதிலும் இவர் பூரணமான வெற்றி பெற்றிருக்கிறார்.

தொடர்ந்து இயங்கி வருவாரானால், ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர் வரிசையில் 'சாந்தன்' என்ற பெயரும் நிச்சயம் இடம் பிடிக்குமென்று நம்புகிறேன்.

226, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம் 30-3-70

தி. ச. வரதராசன்

ஒரு வரி

'பெரிதாகச் சொல்லக்' கூடியதாக இத்தொகுதியில் ஒன்றுமேயில்லை 'சாதனை, சேவை, போன்ற பதங்கள் பொருந்தா பொழுதுபோக்கு இலக்கியமே இது.

வெளியிட்ட யாழ்-இலக்சிய நண்பர் கழகத்திற்கும், முகவுரை அளித்த 'வரதர்' அவர்கட்கும் நன்றிகள்.

சுதுமலை 10-4-70

ஐ. சாந்தன்

உள்ளே

பார்வை —	கலைச்செல்வி —	புரட்டாதி 1966
அப்பா பாவம்! —	விவேகி —	1-8-67
தொலைவு —	கதம்பம் —	ஒகஸ்ட் 1967
மனிதன் —	கதம்பம் —	மே 1967
ஓ! இந்த... —	விவேகி —	1-9-68
ஒருநாள் —	விவேகி —	1-6-68

மறு பிரசுரத்திற்கு அனுமதியளித்த ஆசிரியர்களுக்கு நன்றி.

பார்வை

"உலைச்செல்வி"

"பிள்ளோ, உனக்கென்னடி பிடிச்சது? இப்ப பள்ளிக்குப் போக மாட்டேனெண்டு நீ சொல்லத் தொடங்கி எவ்வளவு நாளாச்சு...?"

அன்னம்மாள் பொறுக்க முடியாமல் கேட்டுவிட்டாள். பொன்மணி சீறினாள்.

"ஏன் நான் போகாட்டிக் காசு வராதெண்டே அந்தரம்? நீ பயப்படாதை காசு கட்டாயம் வரும்" அன்னம்மா துடித்தாள்.

"எடி, உன்னைக் காசுக்காகவே நான் போகச் சொல்லுறன்? பேய் பிடிச்சவள் மாதிரி வீட்டுக்குள்ளேயே கிடக்கிறாய் எண்டு சொல்லவர்தா..." தாய் மூச்சு வாங்கத் தொடர்ந்து சொன்னாள். "...உன்னை நானே வாத்தி வேலைக்குப் போகச் சொன்னனான்? எப்பவோ கலியாணம் பேச, 'மாட்டன் படிப்பிக்கப் போறனெண்டு ஒற்றைக் காலிலை நிண்டாய்; இப்ப என்ன கதை கதைக்கிறாய்?... உனக்கு விருப்பமில்லாட்டி வேலையைவிடு"

'கோவிக்காதை அம்மா; தெரியாமல் சொல்லிப் போட்டன். எனக்கு மனஞ் சரியில்லை. கொஞ்சநேரம் தனியா விடு."

"இதென்ன பிள்ளையோ ..? ஒண்டும் விளங்கேல்லையே கடவுளே..." அன்னம்மா முணுமுணுத்துக்கொண்டே போனாள்.

'சே, என்ன அருவருப்பான உலகம் எட! நன்றிதான் வேண்டாம், கொஞ்சங்கூட மனுசத்தன்மை? என்ன படி

சென்ன, என்ன உடுத்தென்ன...? மனசு சரியில்லாட்டி, மனிசன் மனிசனில்லே.

'இப்ப நான் என்ன செய்கிறது? பள்ளிக்குப் போகவா, விடவா?... பள்ளியாவது பாடமாவது! நான் நினைச்சதுக்கும் இப்ப நடக்கிறதுக்கும் எவ்வளவு வித்தியாசம்...?' பொன்மணி, வேதனையில் முகஞ்சுளித்தாள் '... இந்த இலட்சியம் அது இது எல்லாம் கதைக்கத்தான்; சீவியத்துக்குச் சரிவராது நாங்கள் சரியா நடப்பமெண்டாலும் உலகம் விடாது 'அம்மா சொன்னதில்லேதான் என்ன பிழை? நான் தானே படிப்பிக்கப் போறனென்டு ஆசைப் பட்டேன்? ஆசிரியத் தொழில், உன்னதமான தொழில். வருங்காலச் சந்ததிகளை உருவாக்கும் பொறுப்பு மிக்க-நுணுக்கமான—தொழில். எத்தனை சின்னஞ் சிறிசுகள் 'ரீச்சர் ரீச்சர்' என்டு ஓடிவரும்?? இப்படி நினைச்சுத்தானே கலியாணப் பேச்சையும் உதறித் தள்ளினன். அம்மா என்ர மனசை மாற்றப்பட்டபாடு-?

'எப்படியோ, பதினெட்டு வயதிலே படிப்பிக்கத் தொடங்கி, இப்ப முப்பது வயதிலே பன்னிரண்டு வருச 'ஸேவிஸ்' ஆச்சு. எவ்வளவு சந்தோஷமான, நிம்மதியான காலமாய்ப் போச்சுது இந்தப் பன்னிரண்டு வருஷமும்...?

'ஆனு முந்தநாள்-? இந்தப் பன்னிரண்டு வருசத்திய நிம்மதியையும் நிறைவையும் அந்தப் பன்னிரண்டு நிமிடத்துச் செயல் அடித்துச் சென்று விட்டதே?

'காற்று ஊதி, வெடித்த பலூன் போலக் கடைசியில் மிஞ்சுவதெல்லாம் வெறுமையேதானே? அண்டைக்கு நடந்தது...? சீ, என்ன உலகம்!' வேதனையில் இதழ்கள் கோண பொன்மணி கண்களை மூடிக்கொண்டாள்.

பொன்மணி பஸ்ஸை எதிர்பார்த்துக் கொண்டு நின்றாள். இந்த எட்டேகால் மணி பஸ்லிலே போனால் நேரஞ் சரியாயிருக்கும். ஒன்பது மணிக்குத்தானே பள்ளிதொடங்கும்?

சாலையின் திருப்பத்து மறைவில், எங்கெங்கெல் லாமோ யந்திர இரைச்சல் கேட்டதேயொழிய பஸ்ஸைக் காணவில்லை.

''என்ன பஸ் ஸேவிஸ் இது?

அவள் சலித்துக் கொள்ளும் போதே, தெருவின் வளைவில் பேரிரைச்சலுடன் சிவப்புராட்சஸன்போல பஸ் திரும்பியது.

'ஸ்டேஜன் ரிக்கெற்றை எடுக்கவும், பஸ் வந்து முன்னால் நிற்கவும் சரியாகவிருந்தது. ரிக்கற்றை எடுத்து, வழக்க மான-பழக்கமான-'கொண்டக்டர்' என்பது தெரிந்தும், அவருக்குத் தன்னைத் தெரியும் என்பதை அறிந்தும். காட் டிவிட்டு உள்ளே ஏறினாள். டிரைவருக்குப் பின்னால், மூன் றாவது சீற் ஜன்னலை ஒட்டினாற்போல-அதுதான் அவளு டைய இடம். இருக்கையில் அமர்ந்து, முகத்திற் துளித் திருந்த வியர்வையைக் கைக்குட்டையால் ஒற்றிக்கொண் டாள்.

அடுத்த நிறுத்தத்தில் பஸ் நின்றது.

''ஏறுங்கோ, தம்பியவை'' கொண்டக்டரின் குரல் உற்சாகமாகத் தொனித்ததிலிருந்து, ஏறப்போவது இள வட்டங்கள் என்பது புரிந்தது.

'வழக்கமாக இங்கே ஒருத்தரும் ஏறுவதில்லை. இண் டைக்கு, யார்?' நினைவு இளம்பு முன்னரே விடை கிடைத்து விட்டது.

மூன்று வாலிபர்கள். 'லோங்ஸும் சேட்டும்' அமர்க் களப்பட்டனர். பார்த்தாலே கல்லூரி மாணவர்கள் என் பது புரிந்தது. ஒவ்வொருவர் கையிலும் இரண்டு மூன்று புத்தகங்கள் வேறு பஸ் ஒரு குலுக்கலுடன் புறப்பட்டது மூவரும் இடந்தேடித் தங்கள் கண்களை ஓட்டினார்கள். ஆண்களிருக்கும் இடங்களிலேயே அவர்கள் பார்வைகள் பரந்தன.

தலையைத் திருப்ப முயன்ற பொன்மணி, சற்று வியப்புற்றவளாய் மீண்டும் ஒரு தரம் அந்த முவரையும் பார்த்தாள்.

'அட, அது செல்வம்! மற்றது தனபாலனு?...இரண்டு பேருந்தான்! எவ்வளவு வளர்ந்து விட்டார்கள் இருவரும் இப்ப கல்லூரியிற் படிக்கிறார்கள் போல இருக்கு. என்னிடம் படித்தவர்கள்தானே!' 'என்னிடம் படித்தவர்கள்' என்கிற நினைவில் அவள் மனம் புளகாங்கிதமடைந்தது. அவனிடம் படித்த சிலர் இன்று பல்கலைக் கழகத்திலும் இருக்கிறார்கள்.

'....அந்த மூன்றாவது பையன்? அவன் யாரோ, புதியவன்'

அவர்களுடைய பார்வை அவள் முகத்திற் படிந்தது. பொன்மணி முறுவலித்தாள். ஒரு பாசம், இன்னவென்று இனங்காணமுடியாத ஒரு பாசம், மேவிநின்றது. அவர்கள் ஒரு விஞ்டி திடுக்கிட்டதுபோலத் தோன்றினாலும், மறு விஞ்டியே சமாளித்துக்கொண்டு முறுவலித்தனர். சட்டென்று பொன்மணியின் உள்ளத்தில் ஏதோ நெருடினாற் போலிருந்தது.

அவர்கள் அவளைப் பார்த்தபார்வை அது ஒரு கணமேயானாலும் - அவளைத் துளைத்துவிட்டது. அந்தப் புன்னகை கூட பழைய விகல்பமற்ற புன்னகையாக அவளுக்குப் படவில்லை. அந்தப் புன்னகையூடே ஒரு களங்கம்-சந்திரனில் மறுபோல, இல்லை, பாலில் விஷம்போல - ஊடுருவியதை அவளுணர்ந்தாள். எல்லாமே வெறுமையாகிவிட்டாற் போல ஒரு உணர்வு அவளைச் சூழ்ந்துகொண்டது. 'ஏன் சிரித்தோம்' என்று தன்னையே அவள் நொந்து கொண்டாள்.

'சே, இதெல்லாம் என்ன? அவர்களின் முகத்தில் வாலிபம் கோடிட்டிருக்கிற முதிர்ச்சியால், முகம் மாறுபட்டுச் சிரிப்புமே மாறியிருக்கலாம். அவர்கள், என்தம்பிகள் இல்லை, மக்கள்! பெருமக்கள்! எனக்குள்ள ஆயிரம் புதல்

வர்களுள் இருவர்'. அவள் தனக்குத்தானே சமாதானம் கூறிக்கொண்டாள் சாதாரணமாக வெளியே பார்க்க ஆரம்பித்தாள். கண்களின் புறப்பார்வையில், அவர்கள் தனக்குப் பின்னே உட்காருவதாகத் தோன்றியது.

நினைவோட்டங்களிடையே, தப்பித் தவறிக் காதில் விழுந்தபின் 'லீற்' சம்பாஷனை அவளைத் திடுக்குறச்செய்தது. ''ஆர் மச்சான் இது? சொந்தமே?'' அந்த மூன்றாவது - புதிய - பையன்தான் கேட்டிருக்கவேண்டும். இவர்களில் ஒருவன் குரல் விளங்கவில்லை திருப்பிக் கேட்டான் 'ஏன் கேக்கிறாய்?'' குரலில் குறும்பு தொனித்தது. அவ அவளுடைய 'மாணவர்'களுள் இரண்டாமவன் தொடர்ந்தான். '...சொந்தமில்லையடாப்பா; முந்தி எங்களுக்குப் படிப்பிச்சவ'' ''ஓகோ....'' புதியவன் இழுத்தான், உற்சாகமும் வியப்புங் கலந்த குரலில் ''ரீச்சரா..? ஏன்ரா. என்ன வயதிருக்கும்?'' அவன் கேட்டான் ''அதை ஏன் உனக்கு?'' இவர்களில் ஒருவன் கேட்டான் ''ஃபேஸ்கட் எப்படி மச்சான்?'' இது மற்றவன். அவர்களுடைய சப் பாஷணை தொடர்ந்தது. ஆனால், இதற்குமேல் அவளுக்குக் கேட்கவில்லை. வானமே இடிந்து தலையில் விழுந்தாற் போலிருந்தது.

கோபமும் வேதனையுங் கலந்து அவளை அமுக்கின. 'சீ, நாய்கள் இவர்களெல்லாம் மாணவர்களா?' அந்த ஒரு கணத்திலேயே - அவர்கள் அவளை ஆராய முற்பட்ட போதே-அவர்களுக்கு எல்லாம் வெறுமையாகிவிட்டது இந்த உலகம், அவளுடைய இலட்சியம் எல்லாமே பொய். இவ்வளவுநாள் வாழ்வும் போலிதானா? இப்படியான சொற்களைத் தன் மாணவர்களிடமிருந்தே கேட்கவா அவள் படிப்பிக்கிறாள்?

அவளுக்கு முன் உலகமே சுழல்வது தெரிந்தது. எவ்வளவு நேரமாயிற்றோ?

''என்ன ரீச்சரம்மா, இறங்கேல்லையே? உங்கடை கடைசி 'ஹோல்ற்' வந்திட்டுது''. கொண்டக்டரின் குரல் அவளை உசிப்பிற்று.

'பள்ளிக்கூடத்தடிக்கு வந்தாச்சா? அங்கேபோய் என்ன செய்கிறது? பள்ளியும் பாடமும்' அவளுக்கு வெறுப்பா வேதனையா என்று என்று சொல்லமுடியாத ஒரு நிலை எல்லாவற்றிலுமே வெறுப்புத்தட்டியது.

பஸ்ஸிலிருந்து இறங்கியவள், ''இந்த பஸ் திரும்ப எவ்வளவு நேரமெடுக்கும்?'' என்று கொண்டக்டரைக் கேட்டாள்.

''கா, மணித்தியாலம்; அம்மா''.

'ஒரு லீவு லெற்றரைக் கொடுத்திட்டு வந்திடலாம்' பொன்மணி பள்ளியை நோக்கி நடந்தாள். மனம், உடல் இரண்டுமே கனத்துக் கனத்தன.

பள்ளிக்குள் நுழைந்து, லீவு லெற்றரை எழுதிமுடித்து விட்டுத் தலைமை ஆசிரியரின் அறைக்குள் நுழைந்தபோது அவர் அங்கே இல்லை என்பதைக் கண்டாள். 'என்ன செய்கிறது? யாரிடமாவது கொடுத்துவிட்டுப் போகலாமென நினைத்தாள். அவளுடைய இரண்டாம் வகுப்பு மாணவன் 'விக்கி' தூரத்தில் போய்க்கொண்டிருந்தான். 'நல்லபிள்ளை விக்கி... இங்கை வாரும்'' அவன் ஓடிவந்தான். மகிழ்வு தொனிக்க ''குட் மோணிங் மீச்சர்' என்றான். ''குட்மோணிங் விக்கி மீச்சர் எனக்கு ஒரு உதவி செய்யவேணும். உம்மட்டை நான் ஒரு காயிதம் தாறன், அதைப் பக்குவமா முதல் வாத்தியாரிட்டைக் கொடுக்கவேணும். என்ன?'' மீச்சருக்கு உதவி-அல்லது பணி-செய்கிறோமென்ற பெருமிதத்தில் ''ஓஓ..கவனமாக் குடுக்கிறன் மீச்சர்'' என்றான்.

''நல்லபிள்ளை தாங்கியூ'' என்றவளை அவன் கேட்டான், ''ஏன் மீச்சர் நீங்க இண்டைக்கு வரமாட்டியளே?''

''ஊஹூம்; எனக்குச் சுகமில்லை. போட்டுவாறன்'' பொன்மணி வெளியே வந்தாள்.

'இந்த விக்கியைப் போலத்தானே செல்வமும் தனபாலனும் இருந்தார்கள்? இன்று...? விக்கியும் இன்னும்

கொஞ்ச நாளிலே இப்படித்தான் வருவானோ?'-நினைக்கவே நெஞ்சு துடித்தது.

'ஏதோ இரண்டு பேரை, வைத்து எல்லாரையும் கணக்குப் போடக்கூடாது' என்று ஒரு கணம் நினைத்தாள்.

திரும்பிவந்த ரீச்சரம்மாவை அதிசயத்துடன் பார்த்த படி, ரிக்கற் கொடுத்தார் கொண்டக்டர். வழக்கமான 'சீற்'றில் உட்கார இப்போது பிடிக்கவில்லை. வேறொரு இடத்தில் சென்று அமர்ந்தாள்.

அவளுடன் இப்படி யாராவது 'சேட்டை'விட்டது இதுதான் முதல் தடவையல்ல. ஆனால், அவளுடைய மாண வர்களே 'சேட்டை' விட்டதைத்தான் அவளாற் பொறுத் துக்கொள்ள முடியவில்லை.

வழக்கமில்லாத வழக்கமாகப்போன கையுடனே திரும்பிவிட்ட மகளைப் பயத்துடன் வரவேற்றாள் அன் னம்மாள். ''என்ன பிள்ளை? ஏதன் சுகமில்லையே? ஏன் உடனே வந்திட்டாய்?'' தாய் பதை பதைத்தாள்.

''ஓம், அம்மா சரியான தலையிடி'' அவள் படுத்துக் கொண்டாள்.

''மழை வரும்போலக்கிடக்கு. குடையைக் கொண்டு போவமே?'' அன்னம்மாள் பயந்துகொண்டே மகளைக் கேட்டாள். ஒருதரம் வைரவர் கோயில் ஐயரிடம் 'பார் வைபார்ப்பிக்க' மகளைச் சம்மதிக்கச் செய்வதே, பெரும் பாடாக இருந்தது அவளுக்கு.

'பேசாம வாம்மா.'' - இருவரும் புறப்பட்டார்கள்.

வைரவர் கோவில் 'முக்கால் கட்டை' தூரத்திலிருந் தது. அம்மன் கோவிலையும், அதையடுத்திருக்கிற பெரிய வயல் வெளியையும் தாண்டிக்கொண்டுதான் போகவேண் டும். வயல் வெளியின் முடிவிலிருந்த 'குச்சொழுங்கை'

பத்துப் பன்னிரண்டு வீடுகளே ஊடறுத்துக்கொண்டு வைரவர் கோயிலடியை அடைகிறது.

தாயும் மகளும் அம்மன் கோயிலடிக்கு வந்துவிட்டார்கள். இருந்தாற்போல, வானமே பிளக்கிற மாதிரி இடி முழங்கியது. 'எட்டிவாபிள்ளே. மழை வந்தா நிக்கக்கூட இடமில்லே.''

அம்மன் கோயிலைத் தாண்டி, வயலுக்குள்ளும் இறங்கியாயிற்று. 'கிடைச்சிக்கட்டை' குத்துகிற வயலில் நடப்பதே பெரும் பாடாயிருந்தது. இருந்தாற்போல, 'ஓ ஓ' வென்ற பேரொலியுடன் மழை பிடித்துக் கொண்டது. முந்தானையால் தலையை மூடிக்கொண்டே, ''அந்தா ஒரு வீடிருக்கு. ஓடிவா'' என்றாள் தாய். பெருந்துமியாய் விழுந்த மழையில் உடம்பு தெப்பமாய் நனைந்துவிட்டது. எங்கும் ஒரே புழுதி மணம். இருவரும் ஓடினார்கள்.

வயலைப் பார்த்தவாறு, வேலியில்லாமற் கட்டப்பட்டிருந்த மண்வீடு. அது தாழ்வாரத்தில் இருவரும் ஒதுங்கிக் கொண்டார்கள். சாரல் அடித்தது. தன் சேலையைப் பிழிந்து. மகளின் தலையைத் துவட்டினாள் தாய்.

''நல்லா நனைஞ்சுபோனாய்...குடையையாவது கொண்டுவந்திருக்கலாம்.''

''சங்கடம் பிடிச்ச மழை. எப்பவிடுமோ?''

பேச்சரவம் கேட்டோ என்னவோ, வீட்டுக் கதவு திறந்தது. பதினெட்டு வயது மதிக்கக்கூடிய ஒரு பெண் எட்டிப் பார்த்தாள். பொன்மணி திரும்பினாள்.

'அட, அது மகேசுவரி!'

பொன்மணி அவளை அடையாளங்கண்டு கொண்டாள். இந்த மகேசுவரியும் அவள் மாணவிதான். இது அவள் வீடா? மகேசுவரியும் ரீச்சரைக் கண்டுகொண்டாள் பதை பதைத்து, 'எட, ரீச்சரே? உள்ளுக்கு வாங்கோ ரீச்சர் நல்லா நனைஞ்சு போனியள். ஐயோ''

''வேண்டாரம் மகேஸ்: மழை விடப்போகுது.''

''மழை இப்போதைக்கு விடாது ரீச்சர். நீங்கள் நல்லா நனைஞ்சுபோனியள். உள்ளுக்கு வாங்கோ; ஒருத்தருமில்லை. பொன்மணி, கூச்சத்துடன், தாய் பின்தொடர உள்ளே நுழைந்தாள்.

மகேசுவரி ஒரு வெளுத்த துண்டுடன் வந்தாள்.

''ஈரம் துடையுங்கோ ரீச்சர்''

பொன்மணி துண்டை வாங்கிக் கொண்டாள்.

'இந்த மகேசுவரி ஆக இரண்டு வருசம் என்னட்டைப் படிச்சவள். இப்பவும் எவ்வளவு அன்பு, பயபக்தி? பெண் பிள்ளையள் இப்படித்தான். இவளின்ர தமையன் தங்க ராசாவும் என்னட்டைப் படிச்சவன்தானே. அண்ணனும் தங்கையும் ஒரே வகுப்பு. ...மகேஸ் இப்ப என்னமாதிரி வளர்ந்திட்டாள்!

தங்கராசாவுக்கும் இருபது வயதிருக்கும்...'

பொன்மணி திடுக்கிட்டாள் - 'இருபது வயது'

'அவனும் செல்வத்தைப் போல, தனபாலைப் போலத் தான் இருப்பானே? இந்த வீட்டுக்குள்ள வந்ததே பிழை.'

மகேசுவரி இரண்டு கதிரைகளுடன் வந்தாள்.

''இருங்கோ...'' என்றவன்,

''கொஞ்சம் பொறுங்கோ ரீச்சர் வாறன்'' என்று உள்ளே ஓடி மறைந்தாள். வெளியே மழை சாடிக்கொண் டிருந்தது.

ஐந்து நிமிடங்களாயின. மகேசுவரி கையில் இரண்டு மூக்குப்பேணி'களுடன், வாட்டசாட்டமான ஒரு இளை ஞன் பின்தொடர உள்ளே வந்தாள்.

''தேத்தண்ணி குடியுங்கோ ரீச்சர்'' பேணிகளைக் கையிற் கொடுத்தாள்.

''ரீச்சர் இவர்தான் அண்ணை. உங்களிட்டைப் படிச்சவர்தானே. முந்தி எத்தினை குட்டுவாங்கியிருப்பார்? இப்ப பெரிய ஆம்பிளை'' மகேசுவரி கல கலத்தாள். ரீச்சர் வீடு தேடி வந்துவிட்ட மகிழ்ச்சி அவளுக்கு. வெளியே சிரித்த முகத்துடனிருந்தாலும், உள்ளுக்குள் பதறிக்கொண்டிருந்தாள் பொன்மணி.

''வணக்கம் ரீச்சர்...'' தங்கராசா கை கூப்பினான்.

''...இந்த மழை நல்ல மழை. ஏனெண்டா, உங்களை எங்க வீட்டை கூட்டிக்கொண்ணந்திட்டுது, பாத்தியளே'' அவன், குரலில் மகிழ்வு மேவக் கூறினான். அதே பழைய அன்பு, விநயம், பத்தி, எல்லாம் அவன் குரலில் இழையோடின. 'தங்கராசா மாறவேயில்லையா?' பொன்மணி நிமிர்ந்து பார்த்தாள். ஏதோ தெய்வ சந்நிதானத்தில் நிற்பவன்போலத் துண்டை இடுப்பிற் கட்டிக்கொண்டு, கைகளை மார்பிற் கட்டிக்கொண்டு, அவன் நின்றிருந்தான். தன்னையறியாமலேயே, ''இப்ப என்ன செய்யிறீர் தங்கராசா?'' என்று கேட்டாள் பொன்மணி.

''கமந்தான் ரீச்சர். ஒழிஞ்சவேளையில் சுருட்டுக்குப் போறது''. அன்று விக்கியிடம் கடிதத்தைக் கொடுத்த போது மகிழ்ந்தாளே, அதே மகிழ்வு, அதே பக்தி, இப்போது இந்தத் தங்கராசாவின் பார்வையில் ஒளிவிடக் கண்டாள் பொன்மணி.

'தங்கராசா மாறவேயில்லையா? இரண்டாம் வகுப்பிலை என்னட்டைப் படிச்சு அதே மாதிரித்தானிருக்கிறான். அதே குழந்தைத்தனம்...' பொன்மணி, இந்தக் கணத்தில் செல்வத்தை, தனபாலை, மறந்தாள் உள்ளத்தில் என்ன வென்று இனம் பிரித்தறிய முடியாத ஒரு நிம்மதி.

''அம்மாவும் ஐயாவும் ஒரு கலியாண வீட்டை போட்டினம். அம்மா உங்களைக்கண்டாச் சந்தோஷப்படுவா

ரீச்சர்.'' பொன்மணிக்கு ஒன்றுமே காதில் ஏறவில்லை. மகேசுவரி ஏதேதோ பேசிக்கொண்டிருந்தாள்.

தேநீரைக் குடித்துவிட்டுக் குவளையைக் கீழே வைத்தாள் பொன்மணி. வெளியே மழை விட்டிருந்தது.

''அம்மா, போவோமே''? பொன்மணி கேட்டாள்.

''ஓஓ... நேரமாச்சு...'' தாயும் எழுந்தாள்.

''என்ன அவசரப்படுறியள் ரீச்சர்? இன்னுங் கொஞ்ச நேரம் இருந்திட்டுப் போகலாம்'' அண்ணனுந் தங்கையும் ஒருமித்த குரலிற் கூறினர்கள்.

''இல்லை மகேஸ்; இருட்டுது இனிக் கோயிலுக்கும் போகவேணும் பொன்மணியும் எழுந்தாள்.

''பொறுங்க ரீச்சர்'' தங்கராசா சிறுவன் போல உள்ளே ஓடினான். திரும்பி வந்தபோது கையில் ஒரு குடை ''இதைக் கொண்டு போங்கோ ரீச்சர். மழை வந்தாலும் வரும். நான் பிறகு வாங்கிறன்'' மறுக்க முடியாமல் வாங்கிக்கொண்டாள். பொன்மணி.

''போட்டு வாறம்''

தாயும் மகளும் நடந்தார்கள்.

கோவிலுக்குப்போனது. பார்வை பார்த்தது. வீட்டுக்கு வந்தது ஒன்றுமே பொன்மணிக்கு நினைவில்லை.

'தங்கராசா இன்னும் பழைய தங்கராசாதான். என்னுடைய மாணவன்தான், அவன் இன்னும் மாறவேயில்லை. இந்த ஒரு தங்கராசாவின் அன்பு பக்தி, இப்படியே இருக்குமானால், செல்வமென்ன, தனபாலனென்ன, எத்தனைபேர் எத்தனை கூத்தும் ஆடட்டும் எனக்கு இதுபோதும். செல்வம்-தனபாலைப் போலப் பத்துப்பேர் இருந்தால் தங்கராசாவைப் போல ஒருவனாவது இருந்தாலே போதும். அதுதான் நிறைவு, நிம்மதி, திருப்தி எல்லாம்.

அவள் மகிழ்ச்சிப் பெருமூச்செறிந்தாள்.

அவள் தோற்கவில்லை. அவள் இலட்சியம் தோற்க வில்லை. தங்கராசா மாதிரி மாணவர்கள் உள்ளவரை இந்த இலட்சியம் தோற்கப் போவதுமில்லை. அவனைப் போல எத்தனையோபேரை உண்டாக்க அவளால் முடியும். அவள் இனிப் படிப்பிக்கத்தான் போகிறாள். ராஜினாமாக் கடிதம் கொடுக்கப் போவதில்லை.

அன்றிரவு படுக்கப் போகும்போது, ''அம்மா, நானைக்குப் பள்ளிக்குப் போகவேணும், வேளைக்கு எழுப்பிவிடு'' என்று சொன்ன மகளை வியப்புடன் பார்த்தாள் தாய்.

'இன்று மத்தியானம் வரை, பள்ளியே வேண்டா மென்ற பொன்மணியா இவள்?' - அன்னம்மாள் அதிசயித்தாள். ''வைரவர் கோயில் ஐயருடைய பார்வைநல்ல 'சுட்டிப்பு'த்தான்'' என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

அப்பா பாவம்

"விவேகி"

இரண்டு நாட்களுக்கு முன்புதான், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்குத் திரும்பினேம் நாங்கள் நாங்களென்றால், நான், அப்பா, அம்மா எல்லோரும்தான். நான், இப்போதுதான் முதல் முதல் யாழ்ப்பாணம் போனேன். ஏன், அம்மாகூட இப்போதான் முதல்முறையாக யாழ்ப்பாணம் வந்தாராம். நான்தான் சின்னவன்; அம்மா இவ்வளவு நாட்களும் ஏன் அங்கே போகவில்லை? அப்பாவிடம் இதைக்கேட்டேன். அப்பா சொன்னார், "உன்னைப் போலத்தான் உன்ர அம்மாவும் இங்க பிறந்து வளர்ந்தவ" என்று.

அப்பாவுக்குத்தான் சொந்த ஊர், யாழ்ப்பாணம். அவருடைய அப்பா, அம்மா எல்லோரும், அங்கேதானிருக்கிறார்களாம். ஆனால், தான் பத்து வருஷமாக அங்கே போகவில்லை என்று அப்பா சொன்னார். அப்பாவிற்கு இப்போது கூட அங்கே போக விருப்பமில்லையென்று எனக்குத் தெரியும். ஆனால், பாலா மாமாதான் அடிக்கடி வந்து "ஒருக்காப் போட்டு வாடா, சிவா" என்று தொல்லைப் படுத்துவார். பாலா மாமா, நல்ல 'பிள்ளை'. அப்பாவின் தங்கச்சியுடைய 'புருஷ'ராம். அவர். எங்களுடைய சொந்தக்காரரில் அவர் ஒருத்தரைத்தான் எனக்குத் தெரியும்.

பாலா மாமாவுக்காக, அப்பா யாழ்ப்பாணம் புறப்பட்டார். அம்மா, அப்பா, நான், பாலா மாமா நாலு பேரும் போனேம். போகும் பொழுது "அங்கை எப்பிடியும், இரண்டு கிழமை நிண்டிட்டுத்தான் வரவேணும்" என்று பாலா மாமா சொன்னதற்கு, அப்பா தலையாட்

புனர். ஆனல், அங்கே இரண்டு நாள் நின்றவுடனேயே ஏன் திரும்பினேம்?

ரயிலில் போவதுதான் எவ்வளவு சந்தோஷம்? அதற்கு முதல், நான் ஒருதரம் கண்டியிலிருந்து கொழும் பிற்கு வந்திருக்கிறேன். ரயிலில். யாழ்ப்பாணப் பாதை, கண்டிப்பாதையைப் போல அவ்வளவு அழகில்லேத்தான். ஆனல் நல்ல வேகமாக ஓடியது. எனக்கும் நல்ல சந் தோஷம். வழிநெடுக, அப்பாவும். பாலா மாமாவும் 'யாழ்ப்பாணம் போன பிறகு என்ன செய்வது' என்று பேசிக்கொண்டு வந்தனர். ரயிலுக்குள்ளே அம்மா சொன் னர் ''இளங்கோ அங்கே உன்னேட விளையாட கனக்க அண்ணை, மச்சான்மார், எல்லாம் இருக்கிறன்கள்...'' என்று. ஆனல், அங்கே ஒருதரும் என்னுடன் விளையாட வரவில்லே.

போகும் பொழுது, அப்பாவிற்குப் பயம்; அம்மா விற்கும் பயம். நானும் பாலா மாமாவும், என்னென் னவோ யோசித்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டு போ னேம். வரும்பொழுது, எல்லோருக்குமே கவலே,

'ஸ்ரேஷ்'னுக்கு, ஒருதரும் வரவில்லே. மாமா, ஒரு கார்பிடித்து எங்களே அப்பா வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போனர். அப்பா ஸ்ரேஷன் கட்டிடத்தைப் பார்த்து, ''அட எப்படிக் கட்டிப்போட்டான்கள், இப்ப...'' என் ருர். பாலாமாமா சொன்னர், ''பத்து வருஷமெல்லே? வந்துபார். இன்னும் எத்தினே புதினங்களெண்டு...''

கார் ஓட ஓட புதுப்புது விதமான இடங்களேப் பார்த் தேன். கொழும்பைப் போல இல்லே மாமா, எனக்கும் அம்மாவுக்கும் எல்லாவற்றையும் ஸிளங்கப் படுத்திக் கொண்டு வந்தார். அப்பா, ஒன்றும் பேசாமல், அங்கு மிங்கும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு வந்தார். அம்மா, ''தம்பி...அங்க போய்க் குழப்படி பண்ணக் கூடாது. நல்லபிள்ளேயாயிருக்க வேணும்' என்று சொன் னர். உடனே பாலாமாமா, ''ராசாவுக்கு அங்க ஒரு

பாட்டா, ஒரு பாட்டி, ஒரு சித்தப்பா, இரண்டு மாமி எல்லாரும் இருக்கினம்; வந்து பாரேன்...'' என்று என்னைக் கொஞ்சினர். கார். ஒரு ஒழுங்கைக்குள்ளே போய், ஒரு பெரிய 'கேற்'றுக்கு முன்னே நின்றது.

பெரிய பழைய வீடு. ஒருவருமே வெளியில் இல்லை. இருந்தாற்போல, ஒரு கிழவி ஓடிவந்து, ''எட வந்திட்டியே... வந்திட்டியே..?'' என்று கேட்டுக் கொண்டு அப்பாவின் கன்னத்திலே 'பளார் பளார்' என்று அடித்தாள். எனக்குக் கோபங்கோபமாய் வந்தது. என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. மாமாதான் தூக்கி வைத்திருந்தாரே? அம்மா தலையைக் குனிந்துகொண்டு நின்றார்.

அடித்த கிழவி, இருந்தாற் போல அழுதாள். அழுது கொண்டு அப்பாவைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சினாள்— அப்பா என்னைக் கொஞ்சுவது போல. அப்பாவும் அழுதார். ''என்ர ராசா இவ்வளவு நாளா எங்கபோனனீ...'' என்று அந்தக் கிழவி விம்மினாள்.

'இவதான் ராசான்'ர பாட்டி'' பாலா மாமா, காதுக்குள்ளே மெல்லமாகச் சொன்னார். 'பாட்டியெண்டால்.... எனக்கு விளங்கவில்லை. ''அப்பாவுடைய அம்மா...'' அப்பாவும், அவருடைய அம்மாவும், இன்னும் அழுதுகொண்டுதானிருந்தனர். எனக்குச் சிரிப்பு வந்தது? ஏன் அழுசிறார்கள்?

முன்புற அறையின் ஜன்னலிலிருந்து என்னைப் போன்ற நாலைந்து முகங்கள் எட்டிப் பார்த்தன. அம்மாவைப்போலவும், யாரோ நின்றார்கள். 'டக் டக்'கென்று சத்தங் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஒரு கிழவர் வீட்டுக்குள் விருந்து வந்தார். வெள்ளைத் தலை. அப்பாவைப் போல முகம் அப்பாவின் அப்பாவோ? மாமாவைக் கேட்டேன்'

''கெட்டிக்காரப் பயலடா நீ'' என்றார்.

பாட்டா, பாட்டியைப் போல அப்பாவுக்கு முன்னே போய் நிற்கவில்லை. நேரே அம்மாவிடம் போய்நின்று, உற்றுப் பார்த்தார். அம்மா, அவருடைய காலில் வீழ்ந்து வணங்கியதும், தலையைத்தடவி ''எழும்பு'' என்றார். பிறகு மாமாவுக்குப் பக்கத்தில் நின்று, என்னைப் பார்த்தார். எனக்கு ஒரே வெட்கம். பாட்டாவைப் பார்த்துச் சிரித்தேன்.

பாட்டி அப்பாவைவிட்டு அம்மாவின் கையைப்பிடித்து ''உள்ளுக்கு வா..'' என்று சொல்லி, முன்னே போனார். எல்லோரும் உள்ளே போனோம். எங்களுடைய கொழும்பு வீட்டைப் போல வடிவில்லைத்தான்: ஆனாலும் பெண்ணம் பெரிய வீடு.

சிறிது நேரங் கழித்து, அப்பாவின் தம்பியும், தங்கையும், அவர்களுடைய பிள்ளைகளும் வந்து எங்களைச் சுற்றி வளைத்துக்கொண்டனர். மாமா, ஒவ்வொருவரும் யார் யாரென்று மெதுவாகச் சொன்னார். எல்லோரும் அப்பாவைத்தான் கேள்விகள் கேட்டார்கள். அம்மாவைக் கவனிக்கவில்லை.

அன்று பின்னேரம், யார் யாரோவெல்லாம் வந்தார்கள். அப்பாவைப் பார்க்க. ஒரு பெண் பாட்டியைக் கேட்டாள், 'இவன்தானே சிவசுப்பிரமணியத்தின்ர பெடியன்?

பாட்டி தலையசைத்தாள்,

''நல்ல சிவலையாயிருக்கிறான்'' தேப்பன் கரிக்கட்டை மாதிரி!... தாயைப் போலை.. என்ன?''

''ம்ம்...''

''என்னவாம், மருமகள்?''

''போ போ... நீதான் போய்க்கேள். அவளுக்குத் தமிழ் தெரியுமோ, என்ன இழவோ?'' அம்மாவுக்குத் தமிழ் தெரியாதா? பாட்டி என்ன கதைக்கிறார்? நான் எழுந்து ஓடினேன்.

கூடத்திற்குள் ஏதோ சத்தங்கேட்டு ஓடிப்போனேன். அப்பாவுஞ் சித்தப்பாவுஞ் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். சித்தப்பா, கத்தினார்.

''பத்து வருஷத்துக்கு இத்தப் பக்கம் எட்டிப்பாரா இருந்திட்டுப் பிறகு இப்ப ஏன் வந்தாய்..?''

அப்பாவும் பதிலுக்கு கத்தினார்.

''டேய், பாலா 'வாவா' என்று கூப்பிட்டுத்தா வந்தனான். அம்மா — அப்பாவைப் பார்க்க வந்தனான் உன்னையும் உன்ர தங்கையையுமில்லை..?''

''பத்து வருஷமா இல்லாத அம்மா அப்பா, இப்ப எப்பிடி வந்தவை? சொத்துப் பிறிக்கப் போறியோ?''

''டேய், மடையா...''—அப்பாவுக்கு கோபத்தில் என்ன சொல்லுவதென்று புரியவில்லையோ?

''சின்னணணே, நீ இஞ்சவா'' 'பெரியமாமி' வந்து சித்தப்பாவைக் கூட்டிக்கொண்டு போனார். பாலா மாமா, தங்களுடைய வீட்டுக்கும்-சின்னமாமி வீட்டுக்கும்-போய் விட்டாரோ? அவரிருந்தால் இவர்கள் சண்டை போட்டுக்க மாட்டார்கள். அம்மாவையுங் காணவில்லை. எனக்குப் பயமாயிருந்தது. தேடிப் போனேன்.

காலியிற்கண்ட பையன்கள் 'அண்ணமார், மச்சான்மார்' என்று மாமாசொன்னது இவர்களைத் தானென எதிர் வந்தார்கள். சித்தப்பாவின் மூத்தமகன், என்னிலும் ஒரு வயது மூத்தவன், முன்னேவந்தான்.

'டேய் சில்வா... இங்கே வாடா''

மற்றவன், அவனை இடித்துக்கொண்டு முன்னால் வந்தான்.

'சில்வா இல்லை? பெர்ரரா. டேய் பெரரா இஞ்சவாடா..''

இரண்டு பேரும், என்னைத்தான் கூப்பிட்டார்கள்.

''என் பெயர் இளங்கோ என்றேன்.

''இளங்கோ... கிழங்கோ! என்ன பேரடா இது?'' எல்லோருஞ் சிரித்தார்கள். எனக்கு அழுகை வந்தது; அழுதேன். ''இளங்கோ!... கிழங்கோ?..'' என்று எல்லோருங் கூவினர்கள்.

பெரியமாமி அங்கே வந்தாள்.

''ஏனடா கத்துறீங்கள்?... அவனுக்குக் கிழங்கெண்டா என்னண்டு தெரியுமோ... அரைத் தமிழன்! ஓடுங்கடா அங்கே...''

மாமி, போய் விட்டாள்.

அழுது கொண்டே அம்மாவிடம் போய், நடந்ததைச் சொன்னேன். அம்மா என் கண்களைத் துடைத்துவிட்டுத் தன் கண்களையுந் துடைத்துக் கொண்டாள்.

அம்மா எழுந்து, என்னையுங் கூட்டிக்கொண்டு, அடுக்களைக்குப் போனாள். பாட்டி அங்கில்லை. பெரிய மாமியும், சின்னம்மாவுந்தான் இருந்தார்கள்.

''ஏதாவது வேலை இருக்கா? நானும் செய்யிறேன்?'' அம்மா கேட்டாள்.

''ஒண்டுமில்லை...வெளியிலே இருங்களேன்..'' சின்னம்மா, சிடுசிடுத்தாள். வெளியே வந்துவிட்டோம்.

இரவு, சாப்பிட்டபின் அப்பா என்னையுங் கூட அழைத்துக்கொண்டு, கை கழுவக் கோடிப் பக்கம் போனார். பின்பக்க அறைக்குள், பெரிய மாமியும், சின்னம்மாவும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''அவள் சரியான' கெறுக்கு'ப் பிடிச்சவள் எண்டு நீங்க சொன்னது சரிதான் மச்சாள்..''

''பின்னே? சரியானை சிங்களத்தி! அண்ணையும் 'அள்ளிக் கொண்டு' வந்தார் எங்கயிருந்தோ?...'' அப்பா, உள்ளே பாய்ந்தார்.

''எடி தங்கச்சி... என்ன பேசுகிறாய்? உனக்கென்ன பைத்தியமே...?''

மாமி, திடுக்கிட்டுத் திரும்பினாள்.

''பின்னேயென்ன... நான் சொன்னதிலை, என்ன பிழை? அவள் சிங்களத்திதானே?''

சண்டை பலத்து விட்டது. சித்தப்பா, பாட்டா, பாட்டி, எல்லோரும் வந்து கூடினார்கள். அம்மா மெதுவாக என்னைத் தூக்கிச் சென்று படுக்க வைத்தாள். தூக்கம் வரவில்லை.

'அம்மா, சிங்களத்தியா? அம்மாவா...? இது என்ன இது? சிங்களத்தியென்றால், எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருக்கும் பீரிஸ் மாமாவின் பெண்சாதியல்லவோ? அங்கே 'மார்க்கற்'றுக்குள்ளே கூடைவைத்திருக்கும் அலிஸ் அல்லவோ?...அம்மா சிங்களத்தியென்டா கவுணும் போடவில்லை? 'சர'முங்கட்டவில்லையே? பாட்டியைப் போல பெரிய மாமியைப் போல; சின்னம்மாவைப் போல, சேலை தானே கட்டியிருக்கிறு; நெத்தியிலை குங்குமப் பொட்டிருக்கு?... அம்மா தமிழல்லவோ பேசுறு? அதிலே என்ன பிழை?...

'சரி' சிங்களத்தி யென்டுதான் இருக்கட்டும். அதிலே குறைவு என்ன? ஏன் ஏசினம் எல்லாரும்? சிங்களவரெண்டாலும் இரண்டு கால், இரண்டு கை தானே? கொழும்பிலை, 'தமிழரெண்டா, சிங்கவவர் பகிடி பண்ணினம்: இங்கே 'சிங்கள' வரெண்டா, ஏசினம்! நல்ல முசுப்பாத்தான்..

எனக்கு. அது புதுமையாக விருந்தது—அம்மா 'சிங்களத்தி'! அதற்கென்ன? ஆனால், நான் என்ன இனம்?

தமிழனு, சிங்களவனு?

அப்பா உள்ளே வந்தார்.

''நாலே விடிய வெளிக்கிட வேண்டியது தான். லீலா''

'லீலா!'—இது சிங்களப் பெயரோ? அப்போ, சிவசுப் பிரமணியம்?....பேரிலே என்ன..?

நான் தூங்கிப் போனேன்.

அடுத்த நாட் காலை நான் எழும்ப முன்னமே பாலா மாமா வந்திருந்தார். அவர் பெண்சாதி சின்னமாமியும் வந்திருந்தா.

'அண்ணை... அண்ணை... மச்சாள்... மச்சாள்...' எண்டு அம்மாவையும் அப்பாவையும் சுற்றிச்சுற்றி வந்தா. என்னைக் கொஞ்சியதுதான் அவருடைய வேலை அன்று முழுவதும்.

''எல்லாம் வீணப்போச்சே அண்ணை'' என்று அழுதா.

அப்பா சொன்னார்.... 'பாலா... இப்பநான் உங்க வீட்ட வாறன். பின்னேர மெயிலுக்குப் புறப்பட்டாச் சரி'

மாமா மெல்லத் தலையசைத்தார்.

'டேய். பாலா. நீசொன்னதுக்காகவும் அப்பா அம்மாவைப் பார்க்கிறதுக்காகவந்தான் வந்தேன். ஆனை அவையள் சரியா முகங்கூடக் கொடுத்துக் கதைக்க இல்லையே..அப்பா..அம்மாவோடைதான் ஆறுதலாகக்கொஞ்சம் கதைக்க ஆசைப்பட்டன். சரிவராது போலிருக்கு''

—அப்பாவின் தொண்டை கம்மியது கண்களிலே நீர் வழிந்தோடியது. பாலா மாமா, மாமி, அம்மா, நான் எல்லோருமே அழுது விடுவோம் போலிருந்தது.

அப்பா விம்மினார்.

பாவம் அப்பா!

தொலைவு

"கதம்பம்"

"ஏமாற்றி விட்டாள்! சே... பாதகி" என் மண்டை பிளந்துவிடும் போலிருந்தது. கடைசியில், எல்லாமே கதையாக வெறுங் கனவாய்ப் போகவேண்டியது தானு?

"இனிப் போவதற்கு என்ன இருக்கிறது? எல்லாமே போய்விட்டதே...?"

என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை.

அம்மா அன்றைக்கே சொன்னாள் சாடைமாடையாக.

'தம்பி. விமலா என்னதான் நல்லவளாக இருந்தாலும், அவளுடைய குடும்பம், சூழல், சரியில்லை' என்று அம்மா சொன்னது அத்தனையும் மெய்.

'அன்று அவளின் நினைவாற் பித்தனாகி வீட்டிலிருந்த நான் தான் அதையுணராது முட்டாளாகி விட்டேன். ஆதிரத்தில் இதயம் நடுங்கியது எனக்கு.

ஒரொரு சமயம் என்னால் நம்பக்கூட முடியவில்லை. 'குழந்தை மனம் படைத்த அவளால், இது கூடச் செய்ய முடியுமா? 'முடியும்' என்றுதான் என் கையிலிருந்த கடிதம் சொல்லிக்கொண்டிருந்தது.

ஏறக்குறைய மனப்பாடமாகிவிட்டிருந்த அந்தக் கடிதத்தை இன்னொரு தடவை படித்தேன்.

அன்பின் சகோதரா,

தாங்கள் நினைப்பதுபோல, விமலா நல்லவள் அல்ல. அவளுக்கு வேறொரு 'நண்ப'னிருக்கிறான். அவனை மறப்

பதுதான் உங்கள் நல்வாழ்விற்குகந்த செயல் தங்கள்மீ துள்ள மதிப்பினாலும் அன்பினாலுமே இதனை எழுதினேன்.

தங்கள், 'சாந்தி'

கடிதம் என்னவோ, நாலே வரிதான், ஆனால், என் னுடைய நாலாண்டு நம்பிக்கையைத் தகர்க்கிற சக்தி அதற்கிருந்தது.

'இந்தக் கடிதம் ஏன் பொய்யாக இருக்கக்கூடாது?'

அதிர்ச்சிக்கும், துயரத்திற்கும் ஆளான அந்நிலையில், சற்று உற்சாகமடைவதற்கு என்னை நானே இப்படிக் கேட் டுக்கொண்டேன்.

எவ்வளவு ஆறுதலாக யோசித்தாலும், 'கடிதம் உண் மைதான்' என்ற முடிவிற்கே என்னால் வரமுடிந்தது. இத் தச் சாந்தி, அவளுடைய உயிர்த்தோழி. என்னுடனும் நன்கு பழகியவள். இருவருக்குமிடையில் மனஸ்தாபம் எழுந்து அதன் மூலம் இந்தக் கடிதம் உருவாகியிருக்குமோ? என என் நினைவு ஓடியது.

அப்படியானால், வாரத்தவறாது கடிதம் போடுகிற விமலாவிடமிருந்து ஏன் இரண்டு மாதங்களாகக் கடிதம் வரவில்லை?'

இந்தக் கேள்விக்கு என்னால் விடை காண முடியவில்லை பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. பழைய நினைவு களில், மனந் தாவியது.

நாலாண்டுகளுக்கு முன்பு, எங்கள் குடும்பம், நீர்கொ ழும்பிலிருந்தது, எங்கள் வீட்டிற்குப் பக்கத்து வீட்டு விஜ யரட்னாவின் மகள் இந்த விமலா. அவன் வீட்டில் எல்லோ ருக்குமே நன்றாகத் தமிழ் பேசத் தெரிந்திருந்தது.

தங்கைகளின் விளையாட்டுத் தோழியாய் எங்கள் வீட் டுக்கு வந்தவளை, மனத்தினுள்ளே [illegible]

யாத பாடங்களைக் கேட்க என்னிடம் வருவாள். நாளடைவில், இணைப்பு இறுகியது. எப்படியோ அது காதலென்கிற வியாதி பற்றியுங் கொண்டது.

அந்த விடலைப் பருவத்திலேயே 'காதல்' என்று திரிந்த பைத்தியக்காரத்தனத்தை — அந்த அதிகப் பிரசங்கித்தனத்தை இப்போது நினைத்தால் என்மீதே வெறுப்பாயும் சிரிப்பாயும் இருக்கிறது.

மூன்றுண்டுகாலம், சிரிப்பும் விளையாட்டுமாய்க் கழிந்தது. பெரியவர்களுக்கு எங்கள் பழக்கத்திற் சந்தேகம் ஏற்படாதபடி நடந்துகொண்டோம். போன வருஷம், நாங்கள் யாழ்ப்பாணந் திரும்பியபோது, அவள் அடைந்த வேதனை! அழுத அழுகை!

இந்த ஒரு வருடமாக, வாரா வாரம் ஒவ்வொரு கடிதம் எழுதி வந்தாள். அவற்றிற்தான் எத்தனை உணர்ச்சிகள்? வாக்குறுதிகள்? அடுத்த ஆண்டு பல்கலைக் கழகத்தினுள் இருவரும் நுழைந்தால் எப்படியிருக்கும் என்கிற கற்பனை?

கடைசியில் எல்லாமே கானல் நீராகப் போய்விட, இந்தக் கடிதம் மட்டுமே எஞ்சி நிற்கிறது.

சாந்தியின் கடிதம் வந்து, ஓராண்டுக் காலமாகி விட்டது. இந்த இடைக்காலத்தில் விமலாவையும், அந்தக் கடிதத்தையும் நான் ஓரளவு மறந்துவிட்டேன். பரீட்சை ஞாபகமும், படிப்பின் நினைவும், என்னை இந்தத் துயரிலிருந்து காப்பாற்றிக் கடுமையாகப் படிக்கச்செய்தன. அதன் பலனாக நான் பல்கலைக் கழகத்துள்ளும் புகுந்து ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. விமலாவும் இங்கே வந்தாளா, இல்லையா என்பதை அறிய நான் ஆசைப்படவுமில்லை. 'இவளை ஏன் நான் தேடவேண்டும்?' என்கிற எண்ணமே மேலோங்கியிருந்தது. பேராதனையின் இன்பச் சூழலும், நண்பர்களின் சேர்க்கையும் படிப்பும் என்னை உற்சாகமாகவே வைத்திருந்தன.

அன்று 'ரந்தோலி பெரஹரா' முதல் நாள். கண்டி க்குப் போயிருந்தேன். மாலை ஐந்து மணியிருக்கும் வாவிக் கரையில், எனது நண்பர் பட்டாளத்தை எதிர்நோக்கிய படியே, கும்பலை ரசித்துக்கொண்டிருந்தேன்.

நேரமாக ஆக, சனக்கூட்டம் அதிகரித்தது. நண்பர் களும் வந்தபாடில்லை. கும்பலுக்குள் என் கண்கள் வலை போட்டுக்கொண்டிருந்தன.

நான் திடுக்கிட்டேன். அதோ ஜனக்கும்பலிலிருந்து விலகி என்னைநோக்கி வந்துகொண்டிருக்கும் அந்த இரு பெண்களில் ஒருத்தி!

'ஆ...அது விமலாவேதான்...!' சந்தேகமில்லை.

வெள்ளைப் புடவையும், பச்சை ரவிக்கையுமாக, வன தேவதைபோன்று என்னை நோக்கி வந்து கொண்டிருந் தாள். அவளின் அழகைக் கண்ணுற்றதும், என்னுடைய மாபெரும் இழப்பிற்காகப் பெருமூச்செறிவது தவிர என் னால் வேறெதுவுஞ் செய்யமுடியவில்லை. அப்படியே நின்று விட்டேன். மனம் என்னவென்று சொல்ல முடியாத ஒரு வித்தத்தில் கொந்தளித்தது.

வாவியின் சுவரிற் சாய்ந்து கொண்டு நின்ற என் னெதிரே, நெருங்கிவந்து நின்றாள் விமலா. கண்களில் நீர் பொங்க, முகமே உணர்ச்சிகளாற் திரைப்பட்ட கோலத் தில் அவள் நின்றாள். அவளின் நெருக்கம், பழைய இனிய ஞாபகங்களை நினைவூட்டிற்று. அப்படியே நின்றேன்; பேச முடியவில்லை.

'மகேந்திரன்...' அவள் என்னை அழைத்தாள். குரல் கம்மியிருந்தது. பதில் பேசாமல், ஏறிட்டு அவள் முகத் தைப் பார்த்தேன். தலையைக் குனிந்துகொண்டாள். அவள் கண்களிலிருந்து சொட்டிய இரு நீர்த்துளிகள் என் இதயத்தை இளக்கின. ஆனால், உடனேயே, அவளுக்கு வேறொரு நண்பனிருக்கிறான் என்ற வரிகள் நினைவிற்கு

வந்தன. பேசாது நின்றேன். மனதில் ஆத்திரம் பொங்கியது.

அப்பால் விலகவும் மனம் வரவில்லை. 'குழந்தைகள் போன்ற முகம்' என்று என்னால் வருணிக்கப்பட்ட முகம், சோகத்தில் மூழ்கியிருப்பதை என்னாற் பொறுக்க முடியவில்லை.

'என்ன விமலா!' எப்படியோ முணுமுணுத்தேன். நிமிர்ந்து பார்த்தவள், சட்டென்று கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைத்துக்கொண்டு, அருகேயிருந்த பூங்காவை நோக்கி நடந்தாள். திரும்பிப் பார்த்தேன். அவளுடன் வந்தவளைக் காணவில்லை. என் நண்பர்களையுங் காணோம். அவளை தொடர்ந்தேன்.

சில நிமிடங்கள் மௌனத்திற் கரைந்தன. இருந்தாற் போல அவள் உரத்துச் சொன்னாள்.

'மகேன்... அந்தக் கடிதமே பொய் பொய்...' அவளுக்கு ஆவேசம் வந்தது போலிருந்தது. தான் உண்மையானவள் என்பதை நிரூபிக்க, அவள் வீறுகொண்டாளோ? இரண்டாவது தடவை. 'பொய்' என்று கூறும் பொழுதே அழுதுவிட்டாள்.

நான் நிகைத்தேன். மனதில் இனம் புரியாத ஒரு மகிழ்ச்சிப் பெருக்கு.

'பொய்யா?' இதற்குமேல் என்னால் ஒன்றுங்கேட்க முடியவில்லை. ஆனால், அவள் பரிசுத்தமானவள். என்று எப்படியோ ஒரு நம்பிக்கை உறுதி உள்ளத்தில் வேரூன்றி விட்டது. அவள் விம்மினாள்.

'பொய்... பொய்... பொய்யேதான்! ஏனென்றால், நான் தான் அதை எழுதுவித்தேன்...சாந்தி எழுதியது, சொல்லித்தான்.

அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சி! எனக்கு ஒன்றுமே புரிய வில்லை. மனதில் புதுவகை ஆத்திரம் ஒன்று உருவெடுத்தது.

உனக்கென்ன பைத்யமா?.. ஏன் அப்படி எழுதுவித் தாய்?'

நான் இரைந்தேன். அவளாற் பேசமுடியவில்லை. விக்கி விக்கி அழுதாள்.

'தானுகவே அதைப் போடச் சொன்னுளா? ஏன்?' எனக்குப் புரியவில்லை. எங்கனே இருள் சூழ்ந்துவிட்டது. அருகே ஒருவருமில்லை. அவள் கைகளைப் பற்றினேன் அவள் சொன்னுள்.

'எழுதவேண்டி வந்துவிட்டதே'

'ஏன்?'

ஒரு நிமிடம் மௌனம்.

'உங்களுக்குத் தெரியுமா, உங்க அம்மா எனக்கு ஒரு கடிதம் போட்டா...?'

அம்மா கடிதம் எழுதினுளா, விமலாவுக்கு? நான் பைத்தியக்காரனுகிவிட்டேன்.

'அம்மாவா?'

அவள் தொடர்ந்தாள், ஆங்கிலத்தில். 'அம்மாத் தான்... நீங்க தங்களுக்குரு ஒரே மகனும். அந்த மகன் ஒரு சிங்களப் பெண்ணைக் கல்யாணம் செய்ய விரும்புறை ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தவேண்டாமென்று மிகவும் கெஞ்சி எழுதினுங்க அதை வாசித்தபிறகு, உங்கனே அம்மா அப்பாவிடமிருந்து பிரிக்கிற பாவத்தைச் செய்யவேண் டாமென்று யோசித்து, அதை எழுதுவித்தேன்...அதெல் லாமே பொய்...எனக்கு வேறெரு நண்பனேயில்லை' அவள் குரல் கரகரத்தது.

எனக்கு ஒரே மகிழ்ச்சி. என் விமலா என்னுடைய வள்தான். அவள் ஏமாற்றவேமாட்டாள்.!

அவள் கைகளை உலுக்கினேன்.

'விமலா, என்ன பைத்தியக்காரத்தனமான காரியஞ் செய்தாய்? இனிமேல் இப்படி ஏதாவது செய்துவிடாதே. என்னைத் தாங்க முடியா...' நான் பட்ட பாட்டை அவளிடஞ் சொன்னேன்.

'இனிமேலா...?'

விமலா விரக்தியுடன் சிரித்தாள்.

'மீண்டும் இதென்ன?' நான் பயந்தேன்.

'மகேந்திரன், தயவுசெய்து .. நடந்து முடிந்த கதை. முடிந்து விட்டதாகவே இருக்கட்டும். இனி மீண்டும் தொடரவேண்டாம்...' 'தொடரமாட்டேன்' என்று உங்கள் அம்மாவுக்குச் சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கிறேன்...இனிவேண்டாம் 'அவள் கேவினாள்.

எனக்கு யாரோ உச்சந்தலையில் அடித்தமாதிரி இருந்தது. கடவுளே. குருடனுக்குக் கண்ணைக்கொடுத்துவிட்டுப் பறிக்கிறாயா?'

'விமலா என்ன இது?' நான் கத்தினேன்.

'விடுங்கள்...' விமலா' கையை விடுவித்துக்கொண்டு ஓடினாள். பிடித்து நிறுத்தினேன். மனம் குமுறியது.

'இது முடியுமா? விமலா, இந்தப் பல்கலைக் கழகத்தில் ஒவ்வொரு தரம் சந்திக்கும்போதும் என்மனம் அழுமே. இதற்கென்ன செய்யச் சொல்கிறாய்? உன்னுடைய உண்மையை இப்போது ஏன் சொன்னாய்? அதைச் சொல்லாமலே இருந்திருக்கக் கூடாதா?

அவள், 'என்னை மன்னித்து விடுங்கள். இதை நான் சொல்லாமலே விட்டிருக்கலாந்தான். ஆனால் 'நான் குற்றமற்றவள்' என்பதை உங்களுக்கு உணர்த்தத் துடித்தேன். இன்றைக்கு நேரிலே கண்டதும் பொறுக்க முடியவில்லை' என்றவள், திருப்பி ' நரமாகிவிட்டது, போகலாமா?' என்றாள்.

தலை அசைத்தேன்.

இருவரும், அருகருகே நடந்து கொண்டிருந்தோம். ஆனால், இருவருக்குமிடையில் எட்டாத தொலைவு!

மனிதன்

மனித வாழ்வின் உயிர்த் துடிப்பை அப்படியே பிரத்தியட்சமாகப் பிரதிபலித்துக் காட்டுகின்ற பொரளைச் சந்தியிற்தான் அந்தச் சாப்பாட்டுக் கடை இருந்தது. புகையிரதமேறிப் பெரும் பொருள் தேடச் சென்ற யாழ்ப்பாணத்தார்களை நம்பி, இன்னொரு யாழ்ப்பாண வாசியால் தொடங்கப்பட்டதுதான் அந்தக்கடை. மதியவேளையில் அதற்குள் நுழைவதே பிரம்ம பிரயத்தனந்தான்.

மேற்படிப்பை நாடிக் கொழும்பு சென்ற எனக்கு, அங்கே உற்றார் யாருமில்லை. எனவே, கல்லூரியருகில் 'அறை எடுத்து' வாழவேண்டி நேர்ந்தபோது வயிற்றுப் பாட்டுக்கு இந்தக் கடையைத்தான் என் நண்பன் ஒழுங்கு பண்ணிவிட்டான்

இந்த ஒராண்டு காலமாக, இவர்கள் போடுகிற சாப்பாட்டை நம்பித்தான் என் உயிர் ஓடுகிறது. சத்தோ ருசியோ இல்லாத - ஆனால் அசுத்தமும் செலவும் நிரம்பிய - இந்த உணவை கடையின் சப்ளையர்கள் யந்திரகதியிற் பரிமாறும்போது, 'கடனே' என்று விழுங்கி வைப்பேன்.

அங்கேயுள்ள ஊழியர்களின் - முதலாளியுட்பட முகத்தில் மலர்ச்சியைப் பார்த்த நாட்கள் ரொம்பக் குறைவு. எப்போதுமே முகத்தைக் கடுகடுப்பாகவும், 'ஸீரியஸ்'ஸாகவும் வைத்திருப்பதை அவர்கள் ஒரு கலையாகத்தான் பயின்றிருக்கிறார்களோ என்னமோ. ஒவ்வொருத்தனும் காசு தந்து தானே சாப்பிடுகிறோம் என்ற உணர்வே இருப்பதில்லை அவர்களுக்கு. ஏதோ 'தண்டச்சோறு' போடுவதாக எண்ணம். இப்படிப்பட்டவர்களின் இடையேதான் கந்தையாண்ணை வந்து சேர்ந்தார்.

கந்தையாண்ணை, முதலாளிக்கு உறவினராம். மிகவும் அமைதியான டோக்கு, வந்த புதிதில் 'இதென்னடா இந்த மனுசன் 'உம்பாண்டி' யாயிருக்கு? என்று நானும் எனது நண்பனும் பேசிக்கொண்டோம். ஆனால் நாளாக நாளாகத் தான் அவரை எங்களுக்குப் புரியத் தொடங்கியது. மற்றவர்களைப் போலல்லாது எது கேட்டாலும் எப்படிக் கேட்டாலும் அன்போடு ஆறுதலாக பரிமாறுவார். அவர் முகம் எப்போதும் சிரித்துக்கொண்டேயிருக்கும். ஆள் ஓரளவுக்கு சங்கோஜிதான்.

நாளடைவில் கந்தையாண்ணைக்கும் எனக்குமிடையில் ஒரு பாச இணைப்பு உருவாகியது. 'தம்பி, தம்பி என்ற அவரின் குரலில் அன்பு இழையோடுவதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. வெள்ளைச் சட்டையும் 'சண்டிக் கட்டு' கட்டிய வேட்டியுமாய், நெற்றியிற் சந்தனப் பொட்டோடு சறுசுறுப்பாய்த் திரியும் அந்தக் குள்ள உருவத்தைத்தான் கடையில் நுழைந்ததும் என் கண்கள் தேடும்.

கந்தையாண்ணை எல்லோருக்குந் 'தாசானுதாச'னாயிருந்தார். அவரில்லாமற் கடையே நடக்காதோ என்று நினைக்கத் தோன்றுகிற அளவிற்கு 'கந்தையா, கந்தையா' என்ற குரல்கள் எங்கும் ஒலித்துக் கொண்டேயிருக்கும். அவரது அடக்கத்தையும் பொறுமையையும் அங்குள்ள மற்றவர்கள் தவறாகவே பாவிக்கிறார்கள் என்பது என் எண்ணம். எந்தக் கஷ்டமான வேலையாயிருந்தாலும், நைஸாகக் கந்தையரின் தலையிலே சுமத்திவிடுவார்கள். கந்தையாண்ணையும், புரிந்தோ புரியாமலோ எல்லாவற்றையுஞ் செய்து கொண்டுதான் வந்தார்.

ஒரு நாள் சாப்பிட்டுவிட்டு இலையை வீசப் பின்புறஞ் சென்ற சமயம் 'தடால்' என்ற சப்தம் அடுப்பினருகிற் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினேன். கறி வைக்கிற பாத்திரம் உண்டோடிக் கொண்டிருந்தது. அதனெதிரே ஒரு சப்ளையர் திகைத்துப்போய் நின்று கொண்டிருந்தான். எப்

போதுமே விறைப்பாகத் திரிகிற இளவட்டம். அவன் வேலையிற் சேர்ந்து ஒரு வாரமிருக்கும். இப்போது பயந்து நடுங்கிக் கொண்டிருந்தான்.

நான் இலையைப் போட்டுவிட்டு கை கழுவியதன் பின் வாசற்புறம் சென்றேன். முதலாளி முன்னிலையில் விசாரணை நடந்துகொண்டிருந்தது. 'வியாபார வேளை'யில், முதலாளி ஆத்திரந்தாங்காமல் கத்திக்கொண்டிருந்தார்.

'என்ன கந்தையா இது? கொஞ்சந்தன்னுட கவனமில்லாம... ஐந்தாறு ரூபா நோட்டை கொட்டிப்போட்டு நிக்கிறாய்? கந்தையாண்ணை, குனிந்து போசாமல் நின்றுகொண்டிருந்தார். நான் திகைத்தேன். உண்மையிலேயே நோட்டை கொட்டியவன், சற்றுத் தூரத்தில் 'முழித்'தபடி நின்றுகொண்டிருந்தான். 'போ போ இவதல்லாஞ் சம்பளத்திலை கழிச்சாத்தான் சரி' கடையைத் தாண்டிக்கொண்டிருந்த என் காதில் முதலாளியின் உறுமல் கேட்டது.

அடுத்த தடவை, நான் கந்தையாண்ணையை ஆறுதலாக சந்தித்த சமயம், என்னண்ணை, ஆர் நோட்டை கொட்டினது?' என்று கேட்டேன். அவர் சிரித்தார்.

'ஒருத்தருக்கும் சொல்லாதையுங்கோ... அவன்தான் தம்பி கொட்டினது. ஆளு வந்து ஒரு கிழமைக்குள்ளே இப்படிச் செய்தானெண்டு அறிஞ்சா, முதலாளி கூலிச்சுப் போடுவர்... பாவமெலலே?' எனக்கு என சொல்வதென்றே புரியவில்லை.

'சரிதான்.....' என்றபடி எழுந்தேன்

இந்த மாதிரி, எத்தனையோ நிகழ்ச்சிகள் கந்தையாண்ணையை 'விடுபேய'ஞக மற்றவர்கள் கணிக்குமளவிற்கு நிலைமை இருந்தது. அவர் முகத்தில் கோபக்கனலையோ, அன்றி வெறுப்பின் அறிகுறியையோ நான் ஒரு நாளுங் கண்டதில்லை. ஏன் அந்த முப்பதைந்து வயதிற்குரிய விறுக்காத்தனங் கூட அவரிடமில்லை. தனக்கே உரித்

தான அந்தப் புன்னகையுடன் எல்லாவற்றையுஞ் சமாளித்து வந்தார்.

ஒருநாள் இரவு நா சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, கந்தையாண்ணை சொன்னர் ''தம்பி நாளைக்கு நம்மடை சமுசாரமும் பிள்ளையளும் வருகினம்''

''என்ன சங்கதி'' எ றேன்.

கதிரா ம யாத்திரை இஞ்சவந்தாப் பிறகு, நான் கூட்டிக்கொண்டு போறன்.

''ஓகோ அப்ப அவயளை நாளைக்குப் பாப்பம்'' என்ற வாறு எழுந்தேன்.

அவர் 'ஒஒ' என்றவாறு புன்னகைத்தார்.

அடுத்தநாள், விடுமுறை. வகுப்பில்லாத காரணத்தால் நான் கழுத்துறைக்கு போய்விட்டேன். சாப்பாட்டுக்கடைக்கும் போகவில்லை.

மூன்றும் நாட் காலைதான், அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. கந்தையாண்ணையை வெளியே காணவில்லை. ஒருவேளை வீட்டுக்காரருட கதிர்காமம் போயிருக்கக் கூடுமென நினைத்தேன்

பின்புறம் கைகழுவிக் கொண்டிருந்தபோது கந்தையாண்ணையின் குரல், உரத்து ஒலித்தது. நான் வியந்தேன். இடையிடையே, யாரையோ அதட்டுகிற ஒலியும், 'டேய் டேய்' என்கிற சப்தமுங் கேட்டேன். கந்தையாண்ணையா இப்படிச் சத்தம் போடுகிறார்? என்னால் நம்பமுடியவில்லை.

நான் திகைத்து நின்ற அதே நேரத்தில், தன்னுடைய அறையினின்றுங் கந்தையாண்ணை வெளி வந்தார் என்னைக் கண்டதும் 'எட தம்பியே?... என்ன நேற்று முழுக்கக் காணேல்லை?'' என்றார். விஷயத்தைச் சொல்லிவிட்டு அருகேபோய், என்னண்ணை..? என்ன சங்கதி...? என்று கேட்டேன்.

''அதுதான் தம்பி சொல்லப் போற ''என்றவர் திரும்பிப் அறைக்குள் ஓடினர். திரும்பி வரும்பே து, அவர்

கைப்பிடியில் ஏழெட்டு வயதுச் சிறுவன் ஒருவன் திணறிக் கொண்டிருந்தான். அவன் கண்களில், நீர் குரல் விம்மிக் கொண்டிருந்தது. என் கண்ணில் கேள்விக் குறியைக் கவனித்த அவர், 'இதான் தம்பி என்ர புத்திரபாக்கியம் பாரும் ஆளை என்றார்.

நான் பையனைப் பார்த்தேன். 'துறு துறுப்பானவன் என்பது தெரிந்தது. கந்தையாண்ணை நெருங்கி வந்து சொன்னார். 'இவன் செய்த வேலையைப் பார் தம்பி அவங்கள் இடியப்பம் 'போட்டுக் கடகத்துக்குள்ளை' வைக்க இவர் ரோய் எடுத்து வாட்டுகிறார். ஆரண்ட கண்டா என்ன சொல்லுவாங்கள்? அதிலை கையைக்கலாமே? மகன் தவறு செய்துவிட்டானென்று திருத்த முயலும் பாவனை எனக்கும் சரிதானென்று பட்டது. மேலும் கீழும் தலையை ஆட்டினேன்.

அப்படி நான் தலையை ஆட்டியது, அவருக்கு தெம்பு அளித்ததோ என்னமோ, 'இனிமேல் இப்படிச் செய்வியோடா?'' என்றபடி முதுகில் ஓங்கி ஒன்று வைத்தார். அவன் வீரிட்டான்

பையனின் ஓலத்தைக் கேட்டு, அறையினுள்ளிருந்து ஒரு பெண் எட்டிப்பார்த்தாள். முப்பது வயதுள்ள அவளைப் பார்த்தாலே 'அசல் யாழ்ப்பாணம்' என்று தெரிந்தது. இவள்தான் கந்தையாண்ணையுடைய 'சமுசாரமாயிருக்கு மென நினைத்தேன்.

எனப்பா..? அவனைப்போட்டு ஏனிப்பிடி அடிச்சுக் கொல்லுகிறீர்? அதுக்கென்ன, சின்னஞ்சிறிசுகள் தெரியாத்தனமாகக் கைவைக்கிறேல்லையே?...' அந்தப் பெண் தாங்கமுடியாது கேட்டுவிட்டாள் போலும்.

கந்தையாண்ணை திரும்பினார் கண்களில் அனல் பறந்தது

'' பார் ஆளை. வளர்த்த லட்சணத்திலை பேசவந்திட்டா போணை...போ, அங்காலை..?'' அவர் கத்தினார்.

'' அவனை விடப்பா...'' தாய் மீண்டும் கூறினாள்.

'' இஞ்சார் நீயிப்ப போறியோ இல்லியோ ? இந்தக் கழுதைப் பயலே இப்படியே விட்டாக் கை நீண்டுபோம் பிறகு என்ன செய்வாய்? அதது அந்தந்த நேரத்திலே கண்டிக்க வேணும் ..'' தகப்பன் தொடர்ந்து ஏதேதோ பேசிக்கொண்டே போனார்.

எனக்கு நேரமாகிவிட்டது. நகர்ந்தேன். '' அண்ணை நான் வாறன். நேரமாச்சுது: ?'' '' ஓந் தம்பி .. நீர் போட்டு வாரும் '' என்றவர் மீண்டும் மனைவியையும் பையனையும் பார்த்து அறிவுறுத்தத் தொடங்கினர். நல்லவேளை வேறு ருவரும் அங்கில்லை. நான் கடைவாசலைத் தாண்டும்போதும் அவருடைய குரல் ஒலித்துக்கொண்டிருந்தது.

ஒன்றுமட்டும் நன்றாகப் புரிந்தது எனக்கு. கந்தையா ண்ணை என்னதான 'சப்பாய'ராகவிருக்கலாம், எல்லாருக்கும் 'பேய'ராக இருக்கலாம், ஆனால், அவர் ஒரு குடும்பத் தலைவன். தன் குடும்பத்தவரை வழி நடத்திக் காக்கவேண்டிய பொறுப்பு நிறைந்தவர். எல்லாருடைய அதிகாரத்துக்கும் அவர் அடங்கி வாழலாம். ஆனால் அவருடைய அதிகாரத்திற்கும் அடங்குகிற - அடங்க வேண்டிய - ஜீவன்கள் இந்த உலகில் இருக்கிறார்கள்தான்.

நேரமாகி விட்டது, நான் நடந்தேன்.

ஓ! இந்த ஆண்பிள்ளைகள் என்னதான் செய்கிறார்கள்!?

அலுவலகத்திலிருந்து திரும்பிக் காரை நிறுத்தி விட்டு இறங்கும்போதே, வீட்டில் ஒரு அசாதாரணமான கூல் தட்டுவதாகப் பட்டது, ஈஸ்வரனுக்கு.

'என்ன ஒருவரையுமே காணவில்லை?' என்ற கேள்வி எழும்போதே,

'ஓ... இன்று வெள்ளிக்கிழமை; அம்மா அப்பா கோவிலுக்குப் போயிருப்பார்கள்' என்ற பதிலுங் கூடவே பிறந்தது.

'அப்படியானால், ராஜேஸ், விஜி, கலா எல்லோருமே கூடப் போய் விட்டார்களோ? இருக்காதே...'

சிந்தனையுடன ஈஸ்வரன் உள்ளே நுழையவும், கார்ச்சத்தங்கேட்டு அவன் மனைவி ராஜஸ்வரி வெளியே வரவுஞ் சரியாயிருந்தது.

''எங்கே எல்லாரும்?''

''மாமா மாமி, கலாவோடை கோவிலுக்குப் போட்டினம்'' என்ற ராஜேஸ்,

'விஜி?' என்ற ஈஸ்வரனின் கேள்விக்குப் பதில் சொல்லாமலே உள்ளுக்குப் போய்விட்டாள்.

★

''ஆம்பிளையளெண்டா, எல்லாரும் ஒரு அச்சுத்தானே?'' ராஜேஸ் கோப்பியை நீட்டியபடி கேட்டாள். பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்த ஈஸ்வரனுக்கு, அவள் கேள்

வியோ அதில் ஒளித்த உணர்ச்சிகளோ ஒன்றுப் புரியவில்லை.

''என்ன இது!... இருந்தாப்போலே...''

அவள் தன் பாட்டில் தொடர்ந்தான்; அவன் கேள்விக்குப் பதிலில்லை.

''...பெண்களெண்டா அதுக்கென்று உணர்ச்சிகள், ஆசாபாசங்கள், அவதிகள் ஒன்றுமில்லேயே? ஆக, ஆம்பிளையாய்ப் பிறந்தால்தான் ஒரு 'இதே?' உங்களெல்லாருக்கும் ஏதாவது பொறுப்புணர்ச்சி அல்லது மனுசத்தன்மையைக் கடவுள் வைக்கவில்லேயே? உள்ளதெல்லாம். அவசரந்தான்; அந்தரந்தான? . ''

மூச்சு விடாமல் பொரிந்த மனைவியைப் பார்த்த ஈஸ்வரனுக்கு 'தான் செய்த தவறு, என்ன, எள்று புரியவில்லை.

''என்ன, என்ன விஷயமெண்டு சொல்லிப்போட்டு 'லெக்சர்' அடியுமன்; கேக்கிறேன்...''

''இது, 'லெக்ச'ருமில்லை, ஒண்டுமில்லை... இருங்கோ சொல்லுகிறேன் ..''—ராஜேஸ் முடிக்கு முன்பே, விஜியின் குரல் எங்கிருந்தோ கேட்டது.

'மச்சாள்... ஒருக்கா இங்கே வாறியளே . ''

தங்கையின் குரலில் தொக்கி நின்ற கனம், ஈசுவரனுக்குப் புரிந்தும் புரியாமலுமிருந்தது. ராஜேஸ் போய்விட்டாள்.

கோப்பையைக் கீழே வைக்கும் போதே, பக்கத்தறையில் விஜியும் ராஜேஸும் கதைக்கிற ஒலி கேட்டது. விஜியின் குரல் புரியவில்லை ஏதோ 'குசு குசு'ப்பதாகப்பட்டது. அதில், ஏதோ ஒரு பயம், கெஞ்சல் இரண்டும் தொக்கி நின்றனவோ?

''அதுக்கென்ன விஜி!... என்ன நடந்திடும்?'' ராஜேஸ் கேட்கிறாள்

''.....'' விஜியின்?... பதில் கேட்கவில்லை.

''கொலையே ன்னிகிடுவாரோ?.. '' ராஜேஸ் சிரிக் கிறாள்

'' .. எங்கே, அதையும் பார்க்கலாம்; என்னை மீறி உன்னிடம் வந்தால், கேள்''

''எனக்கென்னவோ பயமாயிருக்கு மச்சான்; அண்ணைக் குக் கோபம் வந்தா, அப்பா கூட கிட்ட வரார்''

''இதுக்கென்ன விஜி, பயம்? நீ பாரேன்.. ''

உரத்துக்கேட்ட ராஜேஸின் குரல், மீண்டுந் தணிந்து கேட்டது.

''மாமா, மாமிக்குத் தெரியாதோ?''

'இல்லை'

'கலாவுக்கு'

'தங்கச்சிக்குத் தெரியாது.. '

தங்கையின் அறையைநோக்கி ஈசுவரன் நடக்கும் போதே கதவைச் சாத்தியபடி ராஜேஸ் வெளியே வந்து விட்டாள். கணவனி முகத்தைப்பார்த்ததும், 'அவனுக்கு விஷயத்தின் முக்கியத்துவம் புரிந்திருக்கிறது' என்பது. அவளுக்குத் தெளி வாகிவிட்டது.

'ஆனாலும் என்னவென்று தெரியாதே!' அவள் முகத்தில் ஒரு சிரிப்பு ஓடியது. அதில் குமிழியிட்டது, கேலியா, வெறுப்பா?

''என்ன அமணி? இப்ப ஏன் இளிக்கிறீர்'' ஈஸ்வரனுக்கு லேசாக சூடேறியது.

''எங்கும் நடக்கிற அமளிதான்; எப்பவும் நடக்கிறது தான்''

,'என்ன எண்டு சொல்லுமன்?''

''மேலே வாங்க சொல்ல...''-ராஜேஸ் மாடிப்படிகளில் ஏறினாள்.

''சரி, இப்பசொல்லும்''

''ஒண்டும் பெரிய விசயமில்லை...''-ராஜேஸ், சிறிது

நிறுத்தி விட்டுச் சொன்னாள்;

''விஜிக்கு யாரோ 'லவ் லெட்டர்' எழுதியிருக்கிறான்!''

''என்னது? '' கதிரையில் சாயப்போன ஈசுவரன் துள்ளி எழுந்தான்.

'' .....என்ன லவ் லெற்றரோ? ..... காதல் கடிதம்! ஆர் எழுதினவன்! இவவும் மறுமொழி எழுதியாச்சோ, இல்லையோ...'' கேள்விகளாக அடுக்கினான், முகம் சிவந்தது.

''.....இறுதாறு இரண்டுபேரும் ரகசியம் பேசினனீங்கள்?''

கணவனின் கோபத்தைப் பார்க்க ராஜேஸ்வரிக்குச் சிரிப்பாயிருந்தது.

அவன் ஆத்திரம் இரட்டிப்பாயிற்று.

''எங்கும் ஒரே கதைதான்!'' அவள் சொன்னாள். முகம், உணர்ச்சிகளற்று இறுகியிருந்தது.

ஈஸ்வரனுக்கு, 'சட்'டென்று ஏதோ நினைவிற்கு வந்தது. உள்ளத்தில் ஊமைக்காயமாக எதுவோ வலித்தது.

நினைவில் நெருடிய அந்த 'ஏதோ ஒன்று' அவன் தன் மறதிக்காக வியந்து வருந்திய கணப்போதிற்குள்- விசுவரூபமெடுத்து அவன் சக்தியை உறிஞ்சிவிட்டது.

'எங்கும் ஒரே கதைதான்' என்ற ராஜேஸ்வரியின் வார்த்தைகளுக்கு, தெட்டத்தெளிவான அர்த்தத்தை அவன், விளங்கிக் கொண்டான். அந்த விளக்கத்தை அவளுக்கு அறிவிக்க அவன் நினைத்தானே இல்லையோ, அவன் கண்கள் தாமாகவே சொல்லிவிட்டன. கணவனின் முகபாவத்திலிருந்தே, 'அவன் பழைய நினைவுகளைப் பற்றிக் கழிவிரக்கத்தின் வாய்ப்பட்டு விட்டான்' என்பதை அறித்த அவள் தன் அவசரத்திற்குத் தன்னையே நொந்தவளாய்—அவனைக் கழிவிரக்கப்படச் செய்தற்குத் தானே வருந்தியவளாய்-

'' நான் சும்மா சொன்னேன், அத்தான்... என்றாள். அவனது நினைவின் திசையை புரிந்துகொண்ட அவனும்

'' சும்மா இல்லை; உண்மைதான் '' என்றான்.

இருவருக்குமிடையில் நிலவிய மௌனத்திற்குத் துணையாய், காற்று அசைந்து கொடுத்தது.

★

வீடு, தூங்க ஆரம்பித்து விட்டது. மேசை விளக்கின் வட்ட ஒளியில் ஏதோ படிக்க முயன்று கொண்டிருந்தவனை ராஜேஸ் நெருங்கினான்.

''பதினொரு மணியாகுது; நாளைக்குக் கந்தோரில்லையே?' ஈஸ்வரன் பதில் பேசாது திரும்பிப் பார்த்தான் திரும்பவும் அவன்தான் பேசினான்.

''என்ன யோசிக்கிறீர்கள்?... நான் சொன்னதையோ, அல்லது விஜியைப் பற்றியோ?... இரண்டுமே சின்ன விஷயந்தான்!''

''சின்ன விஷயமோ?''-இவ்வளவு நேரமும் தன் பிழையையே எண்ணிக் குமைந்து கொண்டிருந்தபடியால், விஜியின் நினைவு பின்னணிக்குப் போய்விட்டிருந்தது

'விஜி! ஓ அந்தக் குழந்தைப் பெண்ணின் மனம் என்ன நினைத்ததோ?... அவளுக்கும் சிலவேளை இதிற் சம்மதமோ?'

ஈஸ்வரனுக்கு, மனம் ஒரு நிலைப்படவில்லை. இந்த சாதாரண சம்பவத்திற்குத் தன் மனம் அலைபாய்வது, அவனுக்கே விசித்திரமாகப் பட்டது. இந்நிலையில், அதை வழிக்குக் கொண்டுவரவும், விஜியின் மன நிலையை அறிந்து சொல்லவும், ராஜேஸ் உதவக் கூடும்.

''ராஜேஸ்...''

''என்ன?...''

''நீர் சொன்னதாலை எனக்கொன்றுமில்லை; ஆனை ஒரு உதவி செய்யும்..''

''இதென்ன இது?'' அவளுக்குப் புரியவில்லை. அவன் தொடர்ந்தான்.

''நான், அப்ப உமக்கு 'இப்படி ஒன்று' எழுதினபோது நீரென்ன நினைத்தீர்? உம்முடைய மனம் அப்போது என்ன பதில் கூறியது என்று சொல்லும்.. ஒன்றையும் ஒளியாமல், நினைவுக்கு வாறதெல்லாத்தையும் அப்படியேசொல்லும். என்மீது ஏதாவது கோபம் வந்திருந்தா அதையுஞ் சொல்லத்தான் வேணும்? சொல்லலாம். அன்றைக்கு நான் பிறத்தியான்; இன்றைக்கு, இரண்டுபேரும் ஒன்றல்லவோ? ஆனபடியால் நான் ஒன்றுக்குமே வருத்தப்படமாட்டேன்- அப்படி அப்படியே சொல்லும் இதாலே இரண்டு பயன். ஒன்று, விஜியின் மனநிலை புரியும்; மற்றது, நான் முந்திச் செய்த வேலையின் பயன் எப்படியிருந்ததென்று தெரியும்...''

அவனது இந்த நீண்ட பேச்சிலிருந்த உண்மைகளை அவளது மனமும் அப்படியே ஒப்புக்கொண்டு விட்டதாலும், இருவரது உணர்ச்சிகளும் ஒத்தே போனமையாலும், அவள் பேசத்தொடங்கினாள்

''முதலிலே உங்கடை கடிதத்தைப் பார்த்த உடனே, எனக்கு அதிர்ச்சியாயிருந்தது, நான், அதை வெறுத்தேன் என்றில்லை: ஆனாலும், அதற்கு மிகவும் பயந்தேன். என் மனதில் இதுவரை 'அப்படியான எண்ணம் எதுவுமே தலை யெடுத்திருக்கவில்லை ஆனால் உள் மனதில், என்னையறியாமல் ஏதேனும் பதிந்திருந்ததோ தெரியாது... நீங்கள் எழுதிய கடிதத்தை, 'யாரது பார்த்து விட்டா'லென்கிற பயமே மேவி நின்றது. 'அதை ஏற்றுக் கொண்டுவிட்டால் என்ன' என்று மனம் நினைத்தது. ஆனால், 'அது ஒழுங்கற்ற செயல்' எனப் பட்டதால் விட்டு விட்டேன்..'

''உண்மையிலேயே காதலென்றிருந்தாலும் 'காதற் கடிதங்கள் காதலிலே கொன்று விடும்' என்று எங்கே? படித்திருந்தது என் நினைவிற்கு வந்தது... ஒருசமயம் நீங்களா—அறிவாளியும் குணவானுமாகிய நீங்களா – இதைச் செய்தீர்கள் என எண்ணினேன். கடிதத்தைக் கண்டவுடன், அதன் உள்ளிருந்த விஷயத்தை அறிந்தவுடன், ஒரு சலிப்பும் வியப்பும் தட்டியது உண்மைதான்... ஆனால், எல்லோரிட

மிருந்தும் அதை மறைக்க முயன்றேன்; உங்களைக் காட்டிக் கொடுக்க மனம் ஏனோ விரும்பவில்லை இருந்தாலும், அண்ணா எப்படியோ கண்டுபிடித்து விட்டார். அது வேறு கதை ''

ராஜேஸ், சிறிது நிறுத்தி விட்டு. மேலே தொடர்ந்தாள் அரை (றை இருளில், ஈஸ்வரன், அசையாமலிருந்து செவி மடுத்தான.

'' ...ஆனால் தினசரி. இந்தக் கடிதத்தின் நினைப்பு வரும். உணர்ச்சிகளேது மற்று, வெறுமனே நினைப்பேன்- காரணமாக ஒவ்வொரு நாளும் நினைப்பேன். அதில், விருப்போ வெறுப்போ இருக்காது. ஆனால், ஒவ்வொரு நாளும் இதை நினைக்கும் போதே மனம் என்னை யறியாமலேயே இருவரையும் இணைத்துப்பார்க்க ஆரம்பித்து விட்டது! ஆறு மாதங்களுக்குள்ளாகவே, எனக்கு உங்களிடம் ஈடுபாடு உண்டாயிற்று.....''

ராஜேஸ், இருந்தாற்போல மௌனமானாள். நாணம், அவளைக் கௌவிப் பிருக்கவேண்டும். ஈஸ்வரனின் முகத்திற் புன்னகை தவழ்ந்ததை அவள் கவனித்திருக்க முடியாது. பேச்சு, மீண்டுந் தொடர்ந்தது.

''.....என்னையறியாமலே இந்த ஈடுபாடு வந்ததற்குக் காரணம். ஏற்கெனவே உங்கள் மீதிருந்த அன்பும் மதிப்புமே. வெறுமையாயிருந்த என் உள்ளத்தில், உங்கள் கடிதம், மிகமிக மெதுவாக என்னையுமறியாமல் ஒரு சிறு பொறியைப்பற்ற வைத்துவிட்டது; அது நெருப்பாகக் கனிய வெகு நாட்களாகவில்லை.''

''விஜீயின் விஷயத்தில், எப்படியோ என்னுகுமோ தெரியவில்லை. அவளுக்கு அவன் மேல் எப்படியான அபிப்பிராயம்'' என்று தெரிந்தாற்தானே மீதியைச் சொல்லலாம்?'' ராஜேஸ் கேள்வியில் முடித்தாள்.

இப்போதுதான் ஞாபகம் வந்தவனாக திடீரெனக் கேட்டான்; ''யார் அவன்?''

"சிவகுமாரன்!"

"அவனு!"

யாரென்று தெரியுமுன்பே-தனது சொந்த அநுபவத்தின் காரணமாக-அவனை மன்னித்து விட்டானும், பெயரைக் கேட்டவுடன் ஈஸ்வரன் திகைப்புற்றான்.

"...அவனு?!... நல்ல பொடியனுச்சே..."

உங்களையும் முந்தி அப்படித்தான் அவள் முடிக்காமலே முறுவலித்தாள், ஈஸ்வரனும் புன்னகைத்தான்.

"பகிடியை விட்டுவிட்டு விஷயத்திற்கு வாரும். என்ன செய்யலாம்?"

"அவன், என்ன எழுதியிருக்கிறனென்று தெரியுமே?" விஜி தன்னிடம் ஒப்படைத்த கடிதத்தை நீட்டினுள்.

அதில், அப்படியொன்றும் பைத்தியக்காரத் தனமான பேத்தல்களோ. சினிமா வசனங்களோ, இல்லை. சிவகுமார் சுருக்கமாகத் தனது மனத்துடிப்பை வெளிக்காட்ட முயன்றிருக்கிறான். ஒரு மாதத்தில், படிப்பு நிமித்தமாக வெளியூர் போகிறனும். அதற்குள் அவள் மன நிலை தெரிந்தால் நிம்மதியாகப் போவானும்...

ஈஸ்வரன், கடிதத்தை மனைவியிடம் நீட்டியபடி. "எல்லாம் காலையில் விஜியைக் கேட்ட பிறகு பார்த்துக் கொள்ளலாம்; எதுக்கும், விஷயம் எங்க மூன்று பேரோடையே இருக்கட்டும்" என்றான்.

★

அண்ணனின் குரல் கேட்டுப் பயந்து நின்றுள் விஜி, நேற்றே ஒரு பூகம்பத்தை எதிர்பார்த்தவள் அவள்.

ராஜேஸ்வரியின் பின்னால், அமைதியாகவரும் ஈஸ்வரனை அதிசயத்துடன் பார்த்தாள், விஜி.

சிவகுமாரின் கடிதத்தை தங்கையிடம் நீட்டியபடி, அமைதியாக ஈஸ்வரன் கேட்டான்.

"இது என்ன?"

அழுகையும் ஆத்திரமும் வெடித்துக் கொண்டுவந்தது விஜிக்கு

''யாரே மடையன்... காவலி ராஸ்கல்! கழுதை தனக்கு அப்படியிருந்தா எல்லோருக்கும் அப்படியே இருக்கும். என்னு நினைச்சானே? சத்தியமாக எனக்கொன்றும் தெரியாதண்ணை..''—விஜி ராஜேஸின் மேல் சாய்ந்தபடி கேவினாள்.

''அண்ணை, அவனைச் சும்மா விடதே''

'ஓ-விஜியின் மனம் இதுவா?'-ஈஸ்வரனுக்கு, ஏதோ பாரங் குறைந்தாற் போலிருந்தது.

''அவனைச் சும்மா விடக்கூடாது.'' விஜி விம்மினாள்.

''போகிறுன், கழுதை! விடு''

கடிதத்தைத் தூளாக்கியபடி, ஈஸ்வரன் அறையை விட்டு வெளியேறினன். விஜியின் ஆத்திரம், அண்ணன் மேல் திரும்பினாலும் அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

ராஜேஸ்வரிக்குப் புரிந்தது.

ஒரு நாள்

நித்தியம் ஐந்தரை மணிக்கே எழுந்துவிடுகிற பழக்கம், இன்றும் அதேநேரத்திற்கு விழிப்பைத் தருகிறது. 'நாலேக் குப்போயா! ஆறுதலாக எழும்பலாம். விடியற்காலையின் தூக்க சுகத்தை அநுபவிக்கவேண்டும்' என்று நேற்றுப் படுக்கும்போது செய்தமுடிவு. இந்த அரைத் தூக்கத்தி லும் மங்கலாக ஏதோ கனவுமாதிரி-நினைவிற்கு வருகிறது நேற்றைய அசதி வேறு! திறக்க நினைத்த கண்களை மீண்டும் மூடிக்கொண்டு, சிவம் தூக்கத்தில் மூழ்க முயன்றான்.

'ஓ... இன்று போயா; வேலையுமில்லை ஏழுமணி மட் டுமாவது இப்படியே கிடக்கவேண்டும். எவ்வளவு சந் தோஷம்! பூவிதழ்கள் மேலேகுவித்து மூடுவதைப்போல, இளங்காலை நேரத்தின் தூக்கம் அவனை மயக்கிற்று.

"தம்பி தம்பீ.."

அம்மாவின் குரல், ஒட்டியிருந்த இமைகளைப் பிரிக்க வைக்கிறது. திறந்த கண்கள் நேரே மணிக்கூண்டை நாடின மணி ஏழரை!

"யாரோ உன்னைத் தேடினம், படலைக்குள்ளை..."

அம்மா போய்விட்டாள்.

கண்களைக் கசக்கிக்கொண்டு, படுக்கையில் எழுந்து உட் காரும்போதே, மனம் ஒரு தேவாரத்தை முணுமுணுக்கின் றது.

'வந்தது யார்?'-பிடிபடவில்லை. தலையைச் சிவி முக த்தைத் அழுந்தத் துடைத்துகொண்டு வெளியே வரும் போது படலைக்கு வெளியே நிற்பவனின் தலை தெரிகிறது.

'யாரது'

''நான்தான் ஐஸே...விக்கி!''

அட இவனு! வாய் தன் பாட்டிற் சொல்கிறது.

''ஒ..! என்ன சங்கதி? வாரும்''

'இவனுக்கு விடிய முந்தி என்ன வேலை?'

ஒரு விநாடி தயக்கம்; மறு விநாடி விஷயத்தைச் சொல்கிறான்.

'ஒன்றுமில்லை சிவம்; ஒரு இருபத்தைஞ்சு ரூபா அவசர மாய்த் தேவை. என்ர தம்பிக்கு பள்ளிச்சம்பளம் கட்ட வேணும். அப்பா இன்னும் காசு அனுப்பேல்லை. அது தான். தந்தீரெண்டால், இரண்டு நாளிலை தந்திடுவேன்... ப்ளீஸ்.'

விக்கி, ஒரே மூச்சில் பேசி முடித்து விட்டான். சிவத் திற்கு வியப்பாயும் பரபரப்பாயுமிருந்தது.

'அட, வராதவனெல்லவோ வந்திருக்கிறான்! உண்மை யில், விக்கியொன்றும் 'முட்டுப்பட்ட' வனல்ல தகப்பன் வெளியூரிலே பெரிய வியாபாரம் இன்று, இவனுக்கு உண் மையிலே ஏதோ அவசரந்தான் போலிருக்கிறது சிவத் திற்கு! உண்மையிலேயே பரிதாபமாய்த்தானிருந்தது. அத் துடன் இவனுக்குக் கடன் கொடுத்தால் பழக்கமும் மதிப் புமல்லவா கிட்டும்?

'கையிலை ஒரு சதமில்லையே!' -மனம் கூறியது.

அவன் 'சட்'டென ஒரு முடிவிற்கு வந்துவிட்டான்.

'பின்னேரம் தந்தால் சரியோ? ஒரு இடத்திலை தர வேணும்; வாங்கித் தாறேன்...''

''ஓ ஓ..! அதுக்கென்ன ஐஸே! நாளைக்கிடையிலை என் ரூற் சரி மெத்தப் பெரிய உபகாரம். தாங்ஸ்!'' அவன் போய்விட்டான்.

வெய்யில் ஏறிவிட்டதென்றாலும், முகத்தில் தண்ணீர் பட்டபோது ஒரு குளிர்! வீட்டுக் கூரைக்கு மேலே புகை முட்டமாகப் பனி அசைந்து கலைவது தெரிகிறது. 'நல்ல வனிதான்!'

இன்று செய்ய வேண்டிய வேலைகள், அவன் மனதில் நிழலிற்கு வருகின்றன. பெரிதாக ஒன்றுமேயில்லை. 'பெரி யப்பா வீட்டிற்கும். மாமி வீட்டிற்கும் ஒருக்கால் போக வேணும். பின்னேரம் ஒரு படம் - ஏதாவது.'

அம்மாளிடஞ் சொல்லிவிட்டுப் புறப்படுகையில் ஒன்பது மணியாகி விட்டது. இந்த இளம் வெய்யிலில், புகையிலைத் தோட்டத்தின் வரம்புகளினூடே செல்வதே தனி மகிழ்ச்சி. அடர்ந்து வளர்ந்த செடிகள், இருபுறமும் இடுப்பளவு உயரத்தில் நிற்பது ஒரு தனி அழகு. கடலில் படகிற் போவது போல, ஒரு இன்பம் அந்த நெடி?

அதுவும் இனிமை தான்.

சுற்றுப்புறத்தின் அமைதி சிவத்தைக் கவர்ந்தது. சைக்கிளை மெல்ல மிதித்தான்.

பெரியப்பா வீடு, மாமி வீடு இரண்டும் அருக்குகே தானிருந்தன. பெரியப்பா பணக்காரர். மாமி அப்படியல்ல. பெரியப்பா மீதுதான் அன்பு. அவர் பணக்காரரென்றல்ல. அவர்தான் மாமியிலும் பார்க்க நல்லவரென்பது அவர் எண்ணம். தவிர மாமிக்குப் பெண்பிள்ளையில்லாததும் ஒரு காரணமாயிருக்கலாம்.

வீட்டிற்குள் நுழைந்ததுமே பெரியப்பா கண்டுவிட்டார்.

"வாடா சோனே!" அவர்தான் கேட்டார்.

"எங்கை இவ்வளவு நாளும் காணேல்லை"

"ஸ்ட்டுமில்லை பெரியப்பா! ஒரே வேலை."

"என்ன கண்டறியாத வேலை உனக்கு?"

வழக்கமான பேச்சுக்கள், உபசரணங்கள்.

சிவத்திற்கு விக்கி கேட்ட காசு நினைவிற்கு வந்தது. தருவதாகச் சொல்லியாயிற்றே தவிர எங்கே காசு வாங்குவது என்றே யோசிக்கவில்லை. ஒரு கணம் நினைத்தான்.

'கொடுக்காமல் விட்டாலென்ன?

சே! அவனுக்கா கொடுக்காமலிருப்பது? கொடுத்தால் என்ன மதிப்பு. அவன் பழக்கம்! அதைவிட லாபம்? எங்கே போவது காசுக்கு?

பெரியப்பாவிடம் கேட்டாலென்ன?

சட்டென்று கேட்டு விட்டான்.

'பெரியப்பா உங்களிட்டை ஒரு இருபத்தைஞ்சு ரூபா எடுக்கலாமே?

"என்னடா காசோ? உனக்கேன்?"

''எனக்கில்லே பெரியப்பா! என்ர கினேகிதன் ஒருவனுக்கு அவசரமாய்...!''

''எட வேறை யாருக்கோ? உனக்கேன் உந்தவேலே? பொறு பெரியம்மாவைக் கேட்டுப் பார்க்கலாம். என்னட்டை இல்லே,'

பெரியப்பா எழுந்து உள்ளே போனார். அவர் சொன்ன விதம் நம்பிக்கையூட்டுவதாயில்லே.

பெரியப்பா திரும்பி வந்தார். முகத்தில் முன்பிருந்த பொலிவில்லே. ஏதோ ஒரு சிடுசிடுப்புக் காணப்பட்டது.

'இல்லேயாமடா தம்பி! என்ன செய்ய?

'விடுங்கோ, வேறை எங்கையாவது பார்ப்போம்.

திடீரென்று பெரியம்மா அங்கே வந்தாள்.

'சிவத்திற்கும் ஒரு இருபத்தைஞ்சு ரூபா கொடுக்க வேணுமெல்லே நாங்கள்? அதுக்காகவே கேட்டனி தம்பி?

சிவம் திகைத்தான்.

அப்போது தான், அவர்கள் தன்னிடமிருந்து போன வருஷம் வாங்கிய காசு நினைவிற்கு வந்தது.

''ஐயையோ... அதில்லே பெரியம்மா, அதை நான் மறந்தும் விட்டேன்.'

'ஏன் மறந்தனீ? நாங்களென்ன தரமாட்டமெண்டு நினைச்சியோ?' பெரியம்மா சிரித்துக் கொண்டே தான் கேட்டாள், ஆலுலும் அதன் காரம் அவனுக்குப் புரிந்தது.

பெரியப்பா ஒன்றும் பேசவில்லே. அவர் பேசவேண்டுமென்று அவன் எதிர்பார்க்கவுமில்லே. அங்கே நடப்பது 'அல்லி இராச்சிய'மென்பது அவனுக்குத் தெரியும்.

ஏதேதோ பேச்சுக்களின் பின் சிவம் புறப்பட்டான்.

'பயப்படாதையடா தம்பி! காசு அடுத்த முறை தரலாம்' அதே நமட்டுச் சிரிப்போடு கூடிய பேச்சு-பெரியம்மா தான் வழியனுப்பினுள். சிவத்திற்கே எரிச்சலாக வந்தது. சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நடந்தான்.

'அட, இன்று வீணுக மனஸ்தாபமாகி விட்டதே.

ஏதோ ஒரு தோல்வி உணர்வு சூழ்ந்தது.

''நீ வருவாயென்டு தெரியும். ஏற்கனவே தயாரிருந்தே தேனீரைக் கொடுத்து வரவேற்றுள். மாமி, பெ

பா வீட்டில் அவன் பேசிக் கொண்டிருந்தபோது' ாமி அங்கே வந்தாளாம். அவன் தான் கவனிக்கவில்லை ண்டை மாமிக்குத் தெரிந்திருக்குமோ' தேனீர் 'மட ட'வென்று இறங்கிற்று.

மாமி நேரே கேட்டே விட்டாள்.

'என்னடா தம்பி! பெரியம்மா சத்தம் போட்டவ?,

மாமிக்கு விஷயம் தெரிந்திருக்கிறது; ஆழம் பார்க் ரூள். சிவம் எல்லாவற்றையும் சொன்னான்.

'இரடா நம்பி வாறன்!' மாமி உள்ளே போவது தரிந்தது.

மாமிக்கும், பெரியம்மாவிற்கும் நீரும் நெருப்பும்போல ற்றுமை. ஒருவரையொருவர் மட்டந்தட்டுவதே பொழுது பாக்கு. உள்ளே போன மாமி, வெளியில் வந்தபோது கயில் இருபத்தைந்து ரூபா இருந்தது.

சிவம் புறப்பட்டான். புகையிலைத் தோட்டத்துப் பாதையால் திரும்பும்போது வெய்யில் நன்றாக ஏறிவிட் து.

திரையில் செய்திப் படங்கள் ஓடிக்கொண்டிருந்தன. வம் பக்கத்திலிருந்த நண்பன் ஸ்ரீயின் காதில் முணு ணுத்தான்.

'மச்சான் நீ என்னை இழுத்துக் கொண்டு வந்திட்டாய் தங்கே அவன்-விக்கி வந்து தேடியிருப்பான் பாவம்.'

'எட, பயப்பிடாதை, ஏழு மணிக்குள்ளை போயிட ாம்.'

அது ஒரு அறிவியற் படம். அங்கிலப் படமானாலும் சரியான நெரிசல். பிற்பகல் விக்கியின் வரவை எதிர் நோக்கியிருந்த சிவத்தை, ஸ்ரீ எப்படியோ இழுத்து வந்து விட்டான்.

அவர்கள் மேலே பேசவில்லை. படம் முடிய சில நிமி டங்களே இருந்தன. திரையில் ஒரு ஆபத்தான சத்திர சிகிச்சைக் காட்சி தத்ரூபமாக எடுத்திருந்தார்கள். ஏதோ மரத்தடியைக் கையாளுவதைப் போல வெட்டுங் கொத் துமாய்...!

சிவத்திற்கு என்னவோ செய்தது. கை கால்கள் 'குறு று'வென்றன.

திடீரெனத் தியேட்டரில் ஒரு சலசலப்பு. சிவமும் ஸ்ரீயும் திரும்பி நோக்கினர். யாரோ ஒரு மனிதனை நாலைந்து பேராகத் தூக்கிச் செல்வது தெரிந்தது.

"மயக்கமாம்..." காக்கிலில் வந்த குரல்கள்.

"ஒவ்வொரு 'ஷோ'விற்கும் இரண்டு, மூன்று பேராவது மயங்கினமாமடா! இந்த ஒப்பரேஷனைப் பார்த்து ஸ்ரீ விளக்கினான்.

சலசலப்பு ஓய்வதற்குள் படம் முடிந்து விட்டது. தேசீய கீதத்தையும், கொடியையும் மதிப்பாரில்லை. கூட்டம் கலைய ஆரம்பித்தது.

சைக்கிளை எடுக்கவந்தவன் அதன் மேற் சாய்ந்தாற் போல நின்றவனிடம் அண்ணை கொஞ்சம் தள்ளுங்கோ ..." என்றான். பதிலில்லை.

நெருங்கிப் பார்த்தபோது புரிந்துவிட்டது.

இவருக்கும் மயக்கம்!

கைத்தாங்கலாக அவனைப் பிடித்து வந்து அருகிலிருந்த வரங்கொன்றில் படுக்கவைத்தான். நல்லவேளையாக அவனுக்கு அரை நினைவிருந்தது.

தம்பி...தண்ணி கொஞ்சம் தாரும் பாப்பம்...

பதில்கூடக் கூறாமல் சிவம் ஓடினான்.

கடையொன்றில் பாத்திரம் நீர்பிடித்து வரவே ஐந்து நிமிடமாகிவிட்டது!

அவன் மீண்டும் மயங்கிவிட்டார்.

நீரை முகத்தில் தெளித்து விசிறினான்

"சிவம் கெதியாவா...உனக்கு நல்ல வேலை: நேரம் போகுது..."

—ஸ்ரீதான் நின்று முணுமுணுத்தான். இவன் கதை விட வேறு ஆட்களையில்லை.

"கொஞ்சம் பொறு மச்சான்..." சிவம் ஸ்ரீயைச் சமாதானப் படுத்துவதற்குள் மயங்கியவருக்குப் பிரக்ஞை வந்துவிட்டது."

"தம்பி.. தண்ணியிருக்கே"

''ஒ...இந்தாங்கோ...''

ஒரு நிமிடத்தில் தீர்த்துவிட்டது. வியர்வை வழிந்த முகத்தைத் துடைத்தவாறே அவர் எழுந்தார். கலைப்பு மாறவில்லை.

''இன்னுங் கொஞ்சந் தருவீரே?''-அவர்தான் கேட்டார்''

''ஓஓ...'' சிவம் திரும்பினான்; 'மச்சான்...ஒரு நிமிஷம்' திரும்பி வந்தபோது, ஸ்ரீ அங்கில்லை. அந்த மனிதர் மட்டுந்தானிருந்தார்.

''உம்மோடை நிண்டவர் போட்டார் தம்பி...''

அடைத்து மெலிந்த குரலில் அவர் சொன்னார்.

''..என்னாலை உமககு வீண் தொல்லை...''

உண்மையான வருத்தந் தொனித்தது குரலில்.

''குடியுங்கோ இதை''

''ஸ்ரீ போட்டானா? என்ன மனுசன் அவன்!'' சிவத்திற்கு சலிப்பாயுங் கோபமாயுமிருந்தது.

''போவமா தம்பி?'' அவர் குடித்தாயிற்று.

''சரி''

தேநீர்க் கடையின் அலங்கார ஒளியில் ஆசை நன்றாகப் பார்த்தான் சிவம். என்ன கட்டுமஸ்தான உடம்பு! வயது கூட முப்பதுக்கு மேலிராது. 'இவ்வளவு வைரமான உடலில் இப்படியொரு பூஞ்சை மனமா?' சிவத்திற்கு வியப்புத் தாளவில்லை.

தேவராசா—அதுதான் அவர் பெயர்—சொன்னார்; 'தம்பி, நான் ஒரு சுமக்காரன் கனக்க இங்கிலீஸ் படங்கள் பாக்கிறனான்தான். ஆனால், இண்டையைப்போல ஒருநாளுமில்லை அதைப் பார்த்த உடனை என்னென்டு தெரியாமல் வந்தது. நீர் சமயத்திற்கு வந்தீர். காற்சட்டைக்காரர், வேட்டி-சாரக்காரரை கண்டா மதிக்கிறேல்லை நீரெண்டா உம்மடை சிநேகிதரையுங் விட்டிட்டு வந்தீரே. ஐயையோ! தம்பி...நீரில்லாட்டி, நான் சரியாத் தவிச்சிருப்பன். கடவுளா உம்மை அனுப்பினார்...என்னாலை உமக்கு வீண் தொல்லை. மெத்த உபகாரம் தம்பி உம்மைப் பார்க்க

எனக்கு எங்கடை '.....', அந்த '.....' படத்திலை வந்தது போலயிருக்கு . ...''

சிவம், இடைமறித்தான்.

''அண்ணை, இதெல்லாம் மனுசனுக்கு மனுசன் செய்யிற உதவி'' தேவராசாவின் ஒவ்வொரு வார்த்தையிலும் இழையோடிய நன்றியை-வீண் உபசாரக் கலப்பற்ற அந்த உணர்ச்சியை-அவனால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. கிராமப்புறத்து வெகுளித்தன்மை அந்தப் 'பெயர்பெற்ற' நடிகருடன் ஒப்பிட 'அறிவு'-இவை அவனை மேலும் இரங்க வைத்தன.

பிரியும்போது, சிவம் கேட்டான், ''அண்ணை இனிப் போவியளே, தனியா?''

''ஓ இனியொண்டுமில்லைத் தம்பி ... உம்மை நான் மறக்கேன் அப்ப வரட்டே...''

கண்களில் நன்றி பளிச்சிட, தேவராசா புறப்பட்டார்.

சிவத்தை இன்னவென்று தெரியாத ஒரு நிறைவு ஆட்கொண்டது. தேவராசாவின் கண்களில் பின்னிட்ட நன்றியுணர்வு, அந்நிறைவைக்குறையவிடவில்லை.

'விக்கி வந்திருப்பானே?''—சைக்கிளை வேகமாகமிதித்தான்.

வீட்டை அடைந்தபோது, மணி எட்டு.

''அப்போதை வந்த பெடியன் வந்து வெகுநேரம் காத்திருந்திட்டுப்போகுது'' என்றாள் அம்மா.

அவன் வந்த விசயத்தை விளக்கினான். சிவம்.

ஐயோ! கட்டாயம் குடு; எதுக்கில்லை எண்டாலும் படிப்புக்கு எண்டா, இல்லை யெண்ணக்கூடாது! இப்பவே போட்டு வா. எங்களுக்கு ஒரு அவதி வாறேல்லையே.' சைக்கிள் அப்படியே திரும்பிற்று.

'கருங்கும்' மென்றிருந்த இருட்டிடையே தூரத்தில் தெரிந்த விக்கிவீடு மின்மினிப் பூச்சியாய் மினுக்கிற்று. துரத்திவந்த நாய்களிடமிருந்து தப்பி வருவதே பெரும் பாடாகி விட்டது.

நிசப்தமான வேளையில், சைக்கிளின் மணி அலறிற்று. வந்து ஐந்து நிமிடமாகிவிட்டது. குரல்கொடுத்தும் பலனில்லை. இருளில் மூழ்கிக்கிடந்த வீட்டின் ஒரு புறத்தே 'அரிக்கன் லாம்பு' ஒன்று தெரிந்தது. இருந்தாற்போல, யாரோ வந்து விளக்கை மறைப்பதுபோலிருந்து.

சிவம் குரல்கொடுத்தான். 'விக்கி இல்லையே?'

யாரது? பதில் அதட்டலாக வந்தது' பெண்குரல்.

'...அவர் நித்திரை; நாளைக்கு வாகும்...'

இல்லைப் பாருங்கோ...ஒரு அவசரவிசயம்...'

''என்னது...?'' அந்தக் குரலுக்குரிய பெண் விளக்குடன் வந்தாள்.

''என்னட்டைச் சொல்லும்...''

சிவம், தயங்கினான்.

''ஒண்டுமில்லை; கொஞ்சக் காசு கேட்டவர் அதுதான் ...அவனை முடிக்கவிடவில்லை.

''ஏன் மேனை? அவனுக்குத்தான் வேலையில்லை: உனக்கும் இல்லையே? அவனுப்பிடித்தான் ஊரெல்லாம் மானத்தை வாங்கிறான்... அவர் படம் பார்க்கிறதுக்குக் காசுக்குத் திரியிறார்... நீ போ மேனை, போ...''

முகத்திலடித்தாற்போல நின்றான் சிவம்: ஒரு கணந்தான் ''என்ன திருப்பம் இது? யாரை நம்புவது?''

இரவைப் போல, மனதுங் கனத்தது. சைக்கிள் 'டைனமோ' வின் 'கிர்'ரிட்ட ஒலி, ஒரே சீராய்ப் பின்னணி இசைத்தது.

ஒழுங்கையின் வளைவு ஒன்று. சன நடமாட்டமேயில்லாத இடம். ஸ்ரீ வீடு, அருகிற்றான்.

ஏதோ மனித உருவம்போல பக்கவாட்டில் எதிரே தோன்றவே, கவனமாக நிமிர்ந்தான்.

அங்கே—

இரண்டு உருவங்கள், தெருவோர அரசமரத்தடியில் ஒன்றையொன்று ஆலிங்கனஞ் செய்த நிலையில் நின்றன.

சிவம் திகைத்தான். பார்க்கக்கூடாத ஒன்றைப் பார்த்து விட்ட அருவருப்பு: ஒரு பதட்டம் ஒரு அச்சம்: இவற்றினூடே, ஏதோ உள்ளத்திலுங்கிளர்ந்தது...

இரண்டிலொன்று, பெண்!

"ஐயோ..... ஆற்றையோ சைக்கிள்..." என்று தினறியது.

இருவரும் தெருவின் ஒவ்வொரு கரைக்கு ஒடி மறைந்தனர்.

பிரகாசம் பொருந்திய சைக்கிள் விளக்கு ஆட்களின் அடையாளங் காட்டிவிட்டது.

ஒன்று, விக்கி! தூங்கிவிட்டதாக சற்று முன் யாரோ சொன்ன அதே விக்கி...

மற்றது ஸ்ரீயின் தங்கை.....

சிவத்திற்கு ஒரு திமைப்பு! அதிர்ச்சியல்ல அது! கவலையும் பயமும் ஏனோ மனத்தை மூடின...

"காக குடுத்திட்டியே?" அம்மா கேட்டாள்.

"ஆளில்லே வீட்டிலே..." விசயத்தைச் சொல்ல முடியவில்லே. சிவத்தால் மனமுமில்லே.

"நீ சாப்பிடவாடா"

நான் பட்டணத்திலே சாப்பிட்டாச்சு; பசிக்கேல்லே"

மணி பதினொன்றடித்து. சிவம், படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். ஏற்கெனவே தேவாரஞ் சொல்லியாயிற்று.

அன்று நடந்தவையெல்லாம் மனதில் நிழலாடின. அவனுக்குத் தூக்கம் வரவில்லே. அன்றைய 'வரவு செலவை' மனதிலே முடித்தாற்தான் தூக்கம் வரும் அவனுக்கு. புரண்டு புரண்டு படுத்தான்.

முற்றிற்று.